COMICS PDF TIMES
HSC



# கடல்மாளிகை அரக்கன்

இன்பராணி

NOT FOR SALE
FAN MADE ONLY

விலை ரூ 1-50

வெளியீடு :

மீனாட்சி பப்ளிகேஷன்ஸ்
34, அம்மன் கோயில் தெரு,
சென்னை-600 003.

# காளியின் கட்டளை;

ஆழம் காண முடியாத கடல் பரப்புந்தான் மகேசபுரி கடல் அலைகளில் இரண்டு விதம் என்பார்கள் ஆண் அலை—பெண் அலை என்று அலைகளின் தன்மையைப் பொறுத்து இப்படி இருவகையாக பிரித்து குறிப்பிடுகிறார்கள் போலும் ஆண் அலை கொடியது அல்ல. மகேசபுரிக் கடல் ஆண் அலைகள் வீசுவதுதான் அதிகம்.

அத்தகைய பயங்கர அலைகளை மெத்தைப் படுக்கையாக ஆக்கிக் கொண்ட மாதிரி பெரிய ஒரு படகு மிதந்து போயி கொண்டிருந்தது. மகேசபுரி கடற்கரையை விட்டு பல கல் தொலைவுக்கு படகு வந்து விட்டது. இப்போது சுற்றிலும் கடல் வெளிதான் கீழ் திசைப் பக்கம் மட்டும் வெகு தொலை வில் ஆங்காங்கே சின்னச் சின்ன தீவுகள் தெரிந்தன.

அந்தப் பெரிய படகு அந்த தீவுகளை நோக்கிச் சென்றது

படகின் இருபக்கங்களிலும் ஐந்து பேர் விதப் பத்து பேர் அமர்ந்திருந்தார்.

அந்த பத்துப் பேருக்கு நடுநாயாகனாய் படகின் கோடியில் ஒருவன் அமர்ந்திருந்தான் கட்டு மஸ்தான உடல் மல்யுத்த வீரனுக்கே உரிய நலவளர்ச்சி நீண்ட முகம் கனத்த அடர்ந்த புருவங்கள் வாரி விட்டாலும் படியாத சுருட்டை முடி வளர்ந்து நீண்டு தோள்பட்டையிலும் கழுத்து பின்புறமும் ஊசலாடியது.

அவன் பெயர் வீரகேது அவனுடைய குரூரமான பார்வை எவரையும் அச்சுறுத்தும் வாய் திறந்து சிரித்தால் உலகமே கிடுகிடுக்கும் அவ்வளவு உரத்த இடியோசை எழுப்பும் குரல்வளை கன்னங்கரேல என்ற கறுப்பு நிறம் கண்ணின் வெண்ணிறப் பகுதியும் பற்களும் வெள்ளவெளே ரென்று பளிச்சிட்டுத் தோன்றுவதால் மேலும் பயங்கர உருவமாகத் தோன்றுவான்கொடும் இருட்டில் அவன் இருந் தால் கண்டு பிடிக்கவே முடியாது, இருட்டோடு அவன் கருப்பு நிற உருவம் கலந்து விடும் கண்களைத் திறந்தால்—

பற்களைக் காட்டினால் வெண்மையான வெளிச்சம் இருட்டைக் கிழித்த மாதிரி பளிச்சிடும்.

அவன் உருவமே அவனை ஒரு கொடூரமான மனிதன் என்பதைக் காட்டியது.

படகை நிறுத்தும்படி சைகைகாட்டி உறுமினான். வெறும் சப்தம் வந்ததே தவிர வார்த்தைகளாக கூறவில்லை

படகு நின்றதும் மடியைத் தடவினான் விரகேது. ஒரு சுருக்கு பட்டுப்பையை அதனுள் கையை விட்டுத் துளாவி ஒரு உருண்டையான கறுப்பு நிற மாத்திரையை எடுத்தான் மாத்திரையை வலது உள்ளங்கையில் வைத்தபடி பிரார்த்தனை செய்கிற மாதிரி கண்களை மூடினான் ஏதோ மனதிற்குள் முணு முணு என்பது உதடுகள் துடிப்பதின் மூலம் உணர்த்தின அப்புறம் மாத்திரை மீது உஸ் உஸ் என்று மும்முறை ஊதினான்,

மாத்திரையைக் கடலுக்குள் போட்டான் உடனே படகை விரைவாக அசைத்து சற்று தள்ளி நிறுத்தினார்கள். மாத்திரை விழுந்த இடத்தில் கடல் நீர் ஒரு மலை உயரத்திற்கு எழுந்து நீர் ஊற்றைப் போல் பீச்சியது சிதறிய நீர்த்திவலைகளைப் போல் ஆனார்கள் எழுந்த நீர் ஊற்று... திரும்ப நீருக்குள் விழவில்லை, கடல் மேல் பரப்பில் எழுந்த ...த்திலேயே புகையாகி மறைந்தன.

மாத்திரை விழுந்த இடத்தில் வட்ட வடிவில் குழி விழுந்தது குழியைச் சுற்றி கடல் நீர் விர் விர் என்று சுழன்று கொண்டேயிருந்தது.

தானாக விழுந்த குழியினுள் ஒரு சொட்டு நீர் கூட விழவில்லை. குறுக்கிடவில்லை. அது ஒரு சுரங்கப் பாதையைப் போல் வழிவிட்டது.

படகிலிருந்த ஒவ்வொருவரும் ஒருவர் பின் ஒருவராக உள்ளே இறங்கினார்கள், புயல் காற்று வீசி பிடித்துத் தள்ளுவது மாதிரி தோன்றியது, அப்படி ஒவ்வொருவராக உள்ளே இறங்கிய அவன் வீர் என்று இழுக்கப்பட்டுப் போய் விட்டார்கள் கடைசியாக தலைவன் விரகேது இறங்கினான் அவன் வீர் என்று இழுக்கப்பட்டான். அடுத்து ஓரிரு நொடிகளில் விழுந்த குழியை மறைத்து கடல் நீர் மூடியது குழிவிழுந்த இடம் தெரியாத அளவுக்குச் சமமட்டமானது வழக்கம் போல் அலை வீசியது. படகில் இப்போது யாருமே

இல்லை. படகு மட்டும் கடலில் மிதந்து மிதந்து ஆடிக் கொண்டிருந்தது ஒரே இடத்தில்.

கடலுக்குள் புகுந்தார்களே என்ன ஆனார்கள்!

கடலில் குழி உண்டாகி வழி விட்டதே அந்த மாத்திரையின் சக்தியால் அல்லவா'

இதோ இங்கே...! விசாலமான மாளிகை சித்திரவேலைப் பாடுகளால் உருவான தூண்கள் தாங்கிய மேல் விதானம் அகன்ற முற்றம் இருபக்கங்களிலும் இரண்டு அறைகள் முற்றத்தில் வடக்குப் புறத்தில் உயரமான மேடை அதன் மேல் மயிலாசனம் மயில் தோகையை விரித்து ஆடினால் போன்ற தோற்றம் கீழே வழவழப்பான பளிங்குத்தரை முகம் பார்க்கலாம் மேலே கடல் தான் கடலுக்கு அடியில் இப்படியொரு அதிசயமான மாளிகை அங்கே எல்லா வசதிகளும் நிறைந்திருந்தன.

கடலில் உண்டான குழிக்குள் இறங்கிய ஒவ்வொருவரும்...இப்போது கீழே இறங்கி வந்து சேர்ந்தார்கள் தலைவன் வீரகேது இறங்கினான் ராஜநடை நடந்து மயிலாசனத்தில் அமர்ந்தான், உடனே பத்து பேரும் முழங்காலிட்டு வணங்கினார்கள்.

வீரகேதுவின் முகத்தில் கொஞ்சங்கூட மலர்ச்சியில்லை. 'ம்...என்று முறைத்துப்பார்த்தான். வெலவெலத்து போனார்கள் அவர்கள்.

பத்துப் பேரும் தெண்டச் சோற்றுப் பிண்டங்கள் பூமிக்குப் பாரம் என்று வாய் திறந்தான் வீரகேது.

அவர்கள் வாய் திறக்கவில்லை.

எனது திட்டப்படி மகேசபுரி மன்னன் குலசேகரன் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும். ம்...நடக்கவில்லையே

'சமுத்திர ராஜாவே! எங்களை மன்னிக்க வேண்டும், இளவரசன் ரகுபதி எங்களை கவனித்து விட்டான். அவன் பார்த்த பார்வையிலிருந்து அவனுக்கு சந்தேகம் ஏற்பட்டு விட்டதை புரிந்து கொண்டோம், அவனைக் கவனிக்காமல் அந்தப்புரத்துக்குள் புகுந்திருப்போமேயானால் நாங்கள் ஒருவர் கூட உயிர்பிழைத்திருக்க மாட்டோம்.

'உங்கள் உயிருக்குப் பயந்து ஓடிவந்துவிட்டீர்கள் அப்படித்தானே' பேடிகளே என்று எழுந்து நின்று தூணில்

போர்த்திருந்த சவுக்கை எடுத்து சுளீர் சுளீர் என்று பத்து பேரையும் அடித்தான்'.

பாவம் அவர்கள் துடியாய்த் துடித்தார்கள்.

'சமுத்திரராஜாவே இன்னொரு சந்தர்ப்பம் கொடுங்கள் மன்னன் குலசேகரின் தலையை உங்கள் காலடியில் காணிக்கையாக செலுத்துகிறோம்' என்றான் அடிப்பட்டதில் ஒருவன்.

'போதும் உங்கள் வீரப்பிரதாபம் நானே போகிறேன் நாளை இரவு குலசேகரன் தலையோடு இங்கே வருகிறேன், அப்படி நான் வெற்றியோடு வந்ததும் உங்களுக்கு என்ன தண்டனை விதிப்பேன், தெரியுமா...ம்...அதை நாளைக்கே தெரிவிக்கிறேன்...ம்...போங்கள் என்று சவுக்கைச் சுண்டி உதறினான்.

பத்து பேரும் ஒரு அறைக்குள் ஓடி மறைந்தனர். வீரகேது...மற்றொரு அறைக்குள் போனான். அது ஒரு பூஜை அறை!

அங்கே உயரமான சிலை அதன் ஒரு கையில் கத்தியும் மற்றொருகையில் ஈட்டியுடனும் அதன் நாக்கு வெளியே ரத்தம் சொட்டியபடியே நீட்டிக் கொண்டிருக்கிறது. அதுவோ கற்சிலை அதனுடைய நாக்கில் ரத்தம் சொட்டுகிறது என்றால் என்ன ஆச்சரியம்,

என்குல தெய்வமே! மாடசாமியே நீதான் அன்று கனவில் தோன்றி குரல் கொடுத்தாய், ராஜவம்சத்தை சேர்ந்த ஐந்து பெண்களுடைய தாலிகளை என் மனைவியின் சடலததிற்கு அணிவித்தால் அவள் உயிர் பெற்று எழுவாள் என்று அருள் தந்தாய் அதிலும் ஒரு நிபந்தனை விதித்தாய்.

அந்த ஐந்து பெண்களின் தாலிகளையும் அவரவர் கணவன் மார்களைக் கொன்றுவிட்டுத்தான் எடுக்க வேண்டும் என்றாய். கணவன் உயிரோடு இருக்கும் போதே தாலிகளை எடுத்து வரக் கூடாது என்றாய் அதன்படி இதுவரை நான்கு ராஜாக்களை கொன்றேன்! அந்த ராஜாக்களின் ராணிகளை இங்கே கொண்டு வந்தேன். தாலிகளைச் சுழற்றினேன் நான்கு தாலிகளை என் மனைவியின் பிணத்திற்கு அணிவித்திருக்கிறேன். இன்னும் ஒரே ஒரு தாலிதான் பாக்கி அதற்காகவே மகேசபுரி நாட்டின் மாகராஜா குலசேகரனைக் குறிவைத்தேன் இன்று தப்பி விட்டான். நாளைக்கு அவனைக் கொன்று விடுவேன் அதற்கு மறுநாள்

குலசேகரன் மனைவி கோதை நாயகியைக் கொண்டு வந்து விடுவேன்.

அவள் தாலியையும் கழற்றி என் மனைவியின் பிரேதத்திற்குச் சூட்டுவேன். என் மனைவி உயிர் பிழைத்து எழுவாள் அப்புறம் அந்த மகாராணி கோதை நாயகியையும் இதோ இங்கே உள்ள மற்ற நான்கு ராணிகளைப் போல் ஒரு மிருகச் சிலையாக்கி விடுவேன்' என்று கூறி வெறி பிடித்தவனைப் போல் சிரித்தான் வீரகேது.

அங்கே மாடசாமி என்ற அந்த துஷ்ட தெய்வத்திற்கு முன்னால் நாய், கரடி, நரி ஓநாய் உருவம் படைத்த நான்கு சிலைகள் காணப்பட்டான்.

அவைகள் நாம் வீரகேதுவால் மிருகச் சிலைகளாக ஆக்கப்பட்ட மற்றதேசத்து மகாராணிகள்.

முன்னால் நின்று வீரகேது இப்படி பிரார்த்தனை செய்து கொண்டதிலிருந்து தெளிவாகிற விஷயங்கள் இதுதான்,

சில தெய்வம் மாடசாமி முன்னால் பிரார்த்தனை செய்து முடித்தவன் தனது தனி அறைக்குப் போனான் அன்று இரவு அவனுக்குத் தூக்கமே வரவில்லை.

அவனுடைய கையாட்கள் பத்துப் பேரும் தங்களுடைய அறைக்குள் போனார்களல்லவா?

அவர்களுக்கு சாப்பிடக் கூட மனமில்லை. அச்சம் தொண்டையை அடைத்து கொண்டிருக்கிறது. ஆகாரம் தொண்டைக்குள் இறங்கவில்லை. நாளைக்கு குரு மகான் வீரகேது மகேசபுரி அரண்மனைக்குள் குலசேகரனைக் கொலை செய்து விட்டு வந்து விட்டால் வெற்றி மிதப்பில் கடல் மாளிகைக்கு வந்ததும் தங்களை என்ன செய் வானோ என்ற அச்சமும் இன்று சவுக்கால் அடித்து உடல் பாளம் பாளமாக உதை கிழிய அடித்தவன் நாளைக்குத் தங்களைக் கொலை கூட செய்தாலும் செய்வான் என்று பேசிக் கொண்டார்கள் இந்த நிலையில் சாப்பிட முடியுமா? தூக்கம்தான் வருமோ? அறைக்குள் அங்கே அங்கே சிதறிக் கிடக்கும் பிணங்களைப் போல் விழுந்து கிடந்தார்கள். பயத்தால் இப்போதே பிணமாகிவிட்ட மாதிரி பிரமை.

மறுநாள்...! வீரகேது கிளம்பினான்.

மந்திர சக்தி மிக்க வில்லைகள் மயக்கப் பொடிமாவவான் மனித எலும்புக் கையால் உருவான சிறு மந்திரக் கோல்—

முதலியவற்றை மறைத்து வைத்துக்கொண்டான் இவை அத்தனையும் அவனது புனிதமான தோற்றத்திற்குரியவை.

அப்படி என்ன புனிதத் தோற்றம்.

காவி உடை.. திருநீறு பூச்சு கமண்டலம் யோக தண்டு வருதிராம மாலைகள் சங்கு திருவோடு ஆகியவற்றைத் தாங்கிய மகாசந்நியாசியைப் போன்ற பக்திப் பரவசமான தோற்றம். பார்த்தால் ஒரு மாகனைப் பார்ப்பதைப் போல் இருக்கும் அந்த வேடத்திற்குள்ளே ஆடைகளுக்கு உள்ளே அத்தனையும் கொடிய மாய மந்திரக் கருவிகக்கு என்னே நரித்தனம் அந்நயவஞ்சகனும்,

மகேசபுரி அரண்மனை—பிரம்மாண்டமானது சித்திரங்களும் நிறைந்த சிங்கார அரண்மனை.

ஆலயங்கள் ஆய்வுச் சாலைகள் கல்விக் கூடங்கள்—கலை அரங்குகள் கேளிக்கை மண்டபங்கள் இப்படியாக மகேசபுரி எங்குமே அழகும் அலங்காரமுமாய் விளங்கியது.

குலசேகரன் தம்பதியர்க்குஒரே மகன் ரகுபதி இன்றைய இளவரசன்.

இந்த ராஜ வம்சத்தில் எந்த மகாராஜாவுக்கும் ஒரு மகனுக்கு மேல் மறுமகன் பிறந்ததில்லை' பட்டத்திற்குரிய பிள்ளை என்று ஒரே ஒரு பிள்ளையைத்தான் ஒவ்வொரு ராஜா வும் பெற்றிருக்கிறார்கள். வேறு மகளோ பிறப்பதே இல்லை. குலசேகரன் அவன் அப்பாவுக்கு ஒரே பிள்ளைதான் ரகுபதி குலசேகரனுக்கு ஒரே பிள்ளைதான்.

இப்படி ஒரே பிள்ளையா இருப்பதால் கண்ணும் கருத்து மாக வளர்த்து ஆளாக்குவார்கள் நோய் நொடி வந்தோ— விபத்துகளில் சிக்கியோ சண்டை சச்சரவு என்றோ எதுவுமே பிள்ளையை நெருங்க விடாமல் சர்வசதா கண்காணிப்பார்கள். விதி வசத்தால் அந்த பிள்ளை இறந்து போனால் தாய் மாமன் வம்சா வழியினர்தான் பட்டத்திற்கு உரியவர்கள் என்று மகேசபுரி ஆட்சிப்பட்டயத்தில் எழுதி வைத்திருக்கிறார்!

நல்ல வேளை இதுவரை அப்படியொரு நிலமை—வாரிசு இல்லாத இக்கட்டான சோதனை மகேசபுரி அரசாங்கத்திற்கு ஏற்படவில்லை.

மகேசபுரிக்கு வேறு அரசியல் பகைவர்களும் கிடையாது அனைத்துக்கும் நேச நாடுதான் மகேசபுரி.

ஆகையால் போர் பூசல் மூண்டு இளவரசன் ரகுபதிக்கு ஆபத்து ஏதும் நேர்ந்துவிட போவதில்லை.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில்தான் ரகுபதியின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் வேலை கொடுக்கிற மாதிரி பிறந்த நாள் விழாவின் போது அந்த பத்து அடியாட்களும் அரண்மனைக்குள் விருந்தாளிகளாய்ப் போகவந்தார்கள். அவர்களை ரகுபதி நோட்டமிட்டான். பின் தொடர்ந்தான். அந்த புரத்திற்குச் சென்ற அந்தப் பாவிகளை மடக்கிவிடவே எண்ணினான் ரகுபதி அவர்கள் தப்பிவிட்டார்கள்.

இனிமேல் ரகுபதி சோம்பேறியாகக் கிடக்கப் போவதில்லை என்பதை எடுத்துக் காட்டும் அறிகுறி தோன்றியது.

ஆம் அரண்மனைக்கு நேர் எதிரிலுள்ள திடலில் ஒரே கூட்டம் அதை அறிந்து வாயில்வல்லானை அனுப்பினான் காவலன் விரைந்தான்.

திடலில் நடப்பது என்ன!

வீரகேது சடை முடியும் காவியும் கமண்டலமுமாய் மகாஞானி போல் நிற்க அவனைச் சுற்றிக் கூட்டம். ஐந்தாறு காவலர்கள் வீரகேதுவைத் தடுத்து நிறுத்தினாற் போல் நின்றார்கள்.

'என்னை எளிதாக எண்ணி விடாதீர்கள் நான் இமய சிம்மன் இருபது ஆண்டுகளாக உட்கார்ந்தது உட்கார்ந்த படியே இமய மலையில் தவம் செய்தவன். சிவபெருமான் அருள் பெற்றவன்' என்னால் ஆகாதது ஒன்றுமில்லை. நான் அரசரைப் பார்த்தே ஆகவேண்டும்' என்று ஆரவாரமாகப் பேசி உடம்பை அசைட்டி கொண்டான்...வீரகேது.

'மகானே எங்கள் மகாராஜா குலசேகரன் ஒருசாதாரண குடிமகனுக்கும் தரிசனம் தருவார். ஒரு சிறியவன் சந்திக்க வந்தாலும் சந்திப்பார் மகாராஜா என்ற கர்வமெல்லாம் அவரிடம் கிடையாது. நீங்களும் மன்னரைத் தாராளமாகச் சந்திக்கலாம் ஆனால் இன்று தரிசன நேரம் முடிந்து விட்டது இனி நாளைக்குத்தான் சந்திக்க இயலும்—

'மகா சக்தியும் மகிமையும் வாய்ந்த நான் கூட தரிசன

நேரத்தில் !தான் வேந்தனை சந்திக்க வேண்டுமா மகான்என்பதற்காக எனக்குத் தனிசலுகை கிடையாதோ’

‘கிடையாது இது எங்கள் சட்டம்

‘சட்டமாவது விட்டமாவது...நான் நினைத்தால் கண நேரத்தில் அங்கே...அந்தப்புரத்தின் போய் அமருவேன்... என் மகாசக்தியால்...

‘அப்படி நீங்கள் நடந்து காட்டினாலும் அது சட்டத்தை மீறிய செயல்தான். அப்போதும் நடவடிக்கை எடுக்கதான் செய்வோம்.

‘ஒகோ...’

என்று ஏதோ மனதில் ஒரு முடிவை எடுத்துக் கொண்டவன் மாதிரி புலித்தோலை விரித்தார் அமர்ந்தான். கூட்டத்தைக் கலைக்க காவலர்கள் முயன்றார்கள்.

ராஜகுமாரன் ரகுபதியால் அனுப்பபட்ட காவலன் வந்து இங்கே நடந்த காட்சியைக் கண்டான் அரண்மனைக் காவலர்களுக்கும் வீரகேதுவுக்கும் நடந்த காரசாரமான உரையாடலைக் கேட்டான். அந்தப்புரத்திற்கு உடனே திரும்பினான். அவ்வளவு வீம்பு செய்கிறரா! பரவாயில்லை. நான் கட்டளையிட்டதாக கூறி அவரை இங்கே அழைத்து வா! என்று காவலனை மறுபடி அனுப்பினான் ரகுபதி.

சென்று சற்று நேரம்கழித்ததுமே மகான்வீரகேதுவுடன் திரும்பினான் காவலன்.

இருக்கையை விட்டு எழுந்து பயபக்தியுடன் மானை வரவேற்றான் ராஜாகுமாரன் ரகுபதி.

வீரகேது ராஜகுமாரனை ஆசீர்வதித்தான்.

தனது வீரப் பிரதாபங்களை விளாசித தள்ளினன் இமய மலையில் தவம் பூண்டிருக்குத் சந்நியாசிகளிலேயே இவன் தான் தலைவனும் அதைக் கதையாகக் கொட்டினான். ரகுபதி அனைத்தையும் கேட்டான். உண்மையிலேயே வீரகேது மகாஞானி என்றே நம்பினான் ரகுபதி,

உடனே !காவலர்களையும் சேடிமார்களையும் வரவழைத்து வீரகேதுக்கு ராஜஉபசாரம் நடத்தினான் ராஜகுமாரன்.

வயிறு புடைக்கத்தின்றான் வகை வகையான உணவுகளை பலவிதப் பழங்களைப் பிழிந்து சாறு எடுத்து குளிர்பான மாக்கிம் வழங்கிட வழங்கிட மூச்சு முட்டப்பருகிறான்.

மகா ஞானியே மந்திர மாயாஜாலங்கள் தெரியும் என்றீர்களே அவையெல்லாம் மனிதனுக்கு அவசியமா?

சாதாரண மனிதனுக்கு அவசியமில்லை, ஆனால் உன் போன்ற இளவரசர்கள் கற்று வைத்திருப்பது நல்லது போர்களம் என்றால் இருதரப்பிலும் பல உயிர்கள் பலியாகும் ஆகவே போர் இல்லாமல் பகைவனை பணியவைக்க மாயா ஜாலாவித்தைகளைப் பயன் படுத்தினால் நல்லது தானே...

'அது வீரமல்லவே...

'வீரத்தால் மட்டுமன்ற விவேகத்தாலும் விரோதியை வீழ்த்தலாம் என்று மனுதர்மமே போதிக்கிறது வஞ்சகனை வாஞ்சை காட்டி வீழ்த்த நினைப்பது வடிகட்டிய மடத்தனம் வஞ்சகனை வஞ்சத்தால் வீழ்த்துவதே விவேகம்.

'அப்படியானால் நான் கூட மாயாஜாலவித்தைகளைக் கற்றுக் கொள்ளலாமா—

'கற்றுக்கொள்'

தாங்களே ஆசானாக இருந்து...

ஆட்சேபனை இல்லை...

இப்போது இரண்டொரு வித்தைகளைச் செய்து காட்டுங்களேன் சோதிப்பதற்காகக் கேட்கிறேன் எனத் தவறாக எண்ணி விடக் கூடாது எலும்பாலான ஒரு சிறிய கோலை எடுத்தான் 'அதோ நிற்கிறார்களே உன் காவலர்கள் அவர்கள் இதோ குரங்குகளாக' என்று கோலை நீட்டினான் விரைவே அங்கே நின்ற அனைவரும் குரங்குகளாகி கீச்சு கீச்சு என்று குரல் எழுப்பிக் குதித்தார்கள்,

ராஜகுமாரன் மெய்சிலிர்த்தான்;

'இதோ பார்!' என்று ராஜகுமாரனின் பக்கம் எலும்புக் கோலைக் காட்டி ஆட்டினான். அடுத்து தன் உருவத்தின் பக்கமாக மேலும் கீழும் அசைத்தான்.

என்ன அதிசயம்!

இளவரசன் வீரகேதுவின் ஆடைகளோடு அங்கே அமர்ந்திருந்தான்.

வீரகேது இளவரசனின் ஆடை அணிகளோடு காட்சி அளித்தான். கணப்பொழுதில் உருவங்களின் ஆடைகளை மாற்றிக்காட்டினன்.

வீரகேது காட்டிய மாயாஜால வித்தைக இளவரசனுக்கு வியப்பை ஊட்டியது வேடிக்கையாகப் பட்டது அக்கலையைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை அதிகரித்து வீரகேது குறிப்பிட்டது மாதிரி விரோதிகளை மாயாஜாலவித்தையால் வீழ்த்தலாம் என்பதறகாக கற்றுக் கொள்ள ரகுபதி ஆசைப்படவில்லை. விளையாட்டுகாகவது கற்று கொள்ள விரும்பினன்.

ரகுபதியின் வேண்டுகோளை மிகவும் 'பிகு' பண்ணிய பிறகு ஏற்றுக் கொண்டான் வீரகேது—

ஆகட்டும் இன்றுமுதல் நான் சத்குருநாதராகிவிட்டேன் இந்த நொடி முதல் இங்கே எங்கு வேண்டுமானலும் நடமாட—போக வர எனக்கு உரிமை உண்டு என்னை யாரும் தடுக்க கூடாது. தனி அறை சகலவசதிகள் எல்லாமம் ஓடி வந்து பணி செய்ய சேடிமார்கள் எல்லாமே வேண்டும்.

'அப்படியே செய்து தருகிறேன் குருதேவா' என்று வீரகேதுவின் பாதங்களில் விழுந்து வணங்கினன் ராஜ குமாரன் ரகுபதி.

சதிகாரன் உள்ளே இடம் பிடித்து விட்டான் என்று உண்மையை உணர முடியாத அப்பாவியானன் ரகுபதி

வந்து தங்கிய அன்றைய தினமே...!

நேரம் நடுநிசி

மாயாவி வீரகேதுவுக்காக ஒதுக்கப்பட்ட அறையில் அங்கே உறக்கமின்றி புரண்டு புரண்டு படுத்தான் வீரகேது

படுக்கையை விட்டு எழுந்தான் பலகணி அருகில் வந்து பூந்திரையை நீக்கி வானத்தை நோக்கினன.

அப்போது நேரம் நடுநிசியையும் கடந்து விட்டது.

அனைவரும் ஆழ்ந்த நித்திரையில் மூழ்கியிருக்கும் நேரம்

வீரகேது...எழுந்து வந்து பையிலிருந்து கூரிய கத்தி ஒன்றை எடுத்தான். அது பளிச்சிட்டு மின்னியது. அதை இடுப்புப் பட்டையில் செருகிக் கொண்டான் அறையை விட்டு வெளியேறினான் சதி...கிளம்பி விட்டது.

அந்தபுரம் அரசரின் அந்தரங்க அறை. அம்சதுளிகா மஞ்சத்தில் அரசர் அயர்ந்திருந்தார். அங்வேறு யாருமே இல்லை. அதனுள்ளேயே காணப்படும் மற்றொரு அறையை எட்டிப்பார்த்தான். ஆம் அதோ தாலிதான் வீரகேதுவுக்கு வேண்டும். இதுவே ஐந்தாவது தாலி இதை தன் மனைவியின் கழுத்திற்கு போட்டு விட்டால்...ஆகா உயிர் பெற்று எழுவாள்.

அக்கிரமக்காரனின் நெஞ்சத்தில் ஆசை தீயாகப் பற்றி எரிந்தது மகாராஜாவைக் கொன்று விட்டு நாளைக்குத் தானே மகாராணியைக் கடத்திப் போக வேண்டும், ஏன் இப்போதே மகாராஜாவைக் கொன்றதுமே மகாராணியை கடத்திச் செல்லக்கூடாதா?

கூடாது மறுநாள் தான் மகாராணியின் தாலியை அகற்றி எடுத்துவர வேண்டும் என்பது குலதெய்வம் மாடசாமியின் ஆணை ஆனால் முதல் நாள் மகாராஜாவை கொலை செய்ய வேண்டும்—மறுநாள் மகாராணியின் மாங்கல்யத்தை அகற்றி எடுத்து வரவேண்டும் என்பதுதான் மாடசாமி இட்ட கட்டளையே தவிர அந்த மகாராணியை கொல்ல வேண்டும் மென்றோ—உருமற்ற வேண்டுமென்றோ மாடசாமி கட்டளை இடவில்லை அது இவனாகவே ஆத்திரத்தில் செய்த அக்கரமம் என்ன அது?

மற்ற மகாராணிகள் நால்வரையும நாய், கரடி நரி ஓநாயாக உருமாற்றி கற்சிலையாக்கி வைத்திருக்கிறானே இந்தக்கொடுமையைகுலதெய்வம் மாடசாமி சொல்லாமலே இவனாகவே செய்தது. இந்த மகராணி கங்கா தேவியை என்ன செய்யக் காத்திருக்கிறானோ.

மகாராணி துயில் கொண்டிருக்கும் அறை...இருபக்கம் இழுத்துப் பூட்டினான்.

காலடி ஓசை எழா வண்ணம் மெதுவாக நகர்ந்தான்.

அருகில் போய் விட்டானே.

மின்னும் கத்தியை இடுப்புப் பட்டையிலிருந்து எடுத்தான் கொஞ்சமும் அஞ்சவில்லை தடுமாற்றமும் இல்லை,

'சதக் சதக் என்று கத்தியை குலசேகரனின் நெஞ்சத்திலேயே குத்தினான் முதல் குத்தே இருதயத்தில் விழுந்து விட்டதால் துள்ளி எழுந்திருக்க முடிந்த அவரால் குரல் எழுப்ப முடியவில்லை. குத்துகள் ஒன்றல்ல இரண்டல்ல மொத்தம் பத்துக் கத்திக் குத்துகள்.

ரத்தம் சுர் சுர் எனப்பீய்ச்சியது. அறையெங்கும் ரத்தத் துளிகளின் சிதறல்கள்.

வீரகேது உடைகளிலும் ரத்தத் துளிகள்.

மன்னன் குலசேகரன் பிணமானான். ஒரு சொல் கூட அவர் வாயிலிருந்து வாரமலே போயிற்று.

வீரகேது விறுவிறுவென்று தன் அறைக்கு விரைந்தான் உள்ளத்தில் ஒரு போராட்டம் 'இப்போதே ஓடிவிடலாமா? இல்லை கூடாது! அப்படி இப்போது ஓடிவிட்டால் நம்மீது சந்தேகம் எழும் மறுநாள் மகாராணியை கடத்திப் போக அரண்மனைக்குள் காலடி எடுத்து வைக்க முடியாது.

தன் அறைக்கு வந்ததும் ரத்தம் படிந்த ஆடைகளை தண்ணீரில் அலசி துவைத்துப் போட்டான். கத்தியை கழுவி சுத்தப்படுத்தி பையில் பத்திரப்படுத்தினான்.

மறுநாள்...அரண்மனை அல்லோலப்பட்டது, அரசர் கொலையுண்டார் என்கிற சேதி எங்கும் பரவியது.

அமைச்சரவை கூடியது. இளவரசன் ரகுபதி கண்களில் கண்ணீர் வடிந்து கொண்டே இருந்தது. எல்லோருக்குமே நல்லவர் குணசேகரன் அவருக்கு பகைவரே கிடையாது பத்து தலை முறைகளுக்கு மேலாக இந்த ராஜ குடும்பத்தில் இப்படியொருவன் கொலை நடந்ததே கிடையாது.

இந்நிலையில் யார் மன்னரைக் கொலை செய்திருக்கக் கூடும்? அமைச்சரவையால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை.

துப்புத்துலக்கும் பொறுப்பை ஒற்றர் தலைவரிடம் ஒப் படைக்கும்படி அரசன் சவ அடக்கத்திற்கு ஏற்பாடுகளைச் செய்யும்படி என்று அமைச்சரவை முடிவெடுத்து இளவரச. ரின் ஒப்புதலையும் பெற்றது.

சிற்றரசர்களுக்கும் மன்னர் மரணச் செய்தி அனுப்பப்பட்டது. இறுதிச் சடங்குகளில் மற்ற நாட்ட வரும் கலந்து கொள்ளவதற்கு வசதியாக மூன்றும் நாள் சவ அடக்கம் நடைபெறும் என்று அறிவித்தனர்.

மூன்றாம் நாள் மன்னரின் சவ அடக்கம் என்ற திர்மானம் வீரகேதுவுக்கு மனக்குழப்பத்தை ஏற்படுத்தியது. தாலிச் சூரிய அரசன் கொல்லப்பட்ட மறுநாளே மாங்கல்யத்தைக் கழற்றிவர வேண்டும் என்பது மாடசாமி தெய்வத்தின் வாக்கு. மற்ற நான்கு மன்னர்களைக் கொன்று மறுநாளே மகாராணியின் தாலிகளுக்காக ராஜாக்களின் சவ அடக்கம் நடந்து முடிந்தால் வசதியாகப் போயிற்று.

இங்கே...? நிலைமை மாறிவிட்டதே சரி...மறுநாளே தாலியைக் களவாடி விடலாம், உடனே வாயுவேக மனோவேக மாய் எடுத்துப் போம்...தன் மனைவியின் சடலத்திற்கு ஐந் தாவது தாலியைக் கட்டிவிடலாம். அப்புறம் இந்த மகா ராணி கங்கா தேவியைக் கடத்தி வந்து மிருகச் சிலையாக்க லாம் என்று திட்டமிட்டான்.

கணவனை இழந்த பிறகு கழுத்தில் கிடக்கும் தாலியைக் கழற்றுவதற்காக ஒரு சடங்கை நடத்துவார்கள். அதற்குள் இங்கே கங்காதேவி தாலியைக் கழற்றிவிட வேண்டும். அதாவது களவாடியாக வேண்டும்.

அதே நேரம் இளவரசன் ரகுபதிக்கு ஒரு எண்ணம் தோன்றியது.

மாயாவி வீரகேதுவை. தனியே ஒரு அறைக்கு அழைத் துச் சென்றான்.

"மகானே! தங்களால் எதையும் சாதிக்க முடியும் என் றீர்களே இத்தகையவல்லமைமிக்க தங்களால் கொலையுண்ட என் தந்தையை மீட்க முடியாதா?

"முடியாது ராஜகுமாரா உன் காவலர்களைக் குரங்கு

களாக மாற்ற முடிந்த என்னால் மறுபடி அவர்களை மனிதர்களாக மாற்ற முடியவில்லையே இன்னமும் குரங்குகளாகத்தானே அரண்மனை கோபுரங்களில் அலைகிறார்கள் இதற்கு முன்பு கூட நான்கு பெண்களை மிருக உருக் கொண்ட சிலைகளாக மாற்றிவிட்டேன். ஆனால் அவர்கள் இறந்து போய் விட்டார்கள் ஆதலால் இங்கே கொலையுண்டு இறந்து போன உன் தந்தையை உயிர் பெற்று எழச் செய்ய என்னால் ஆகாது' என்றான் வீரகேது.

இது உண்மையே இப்போதுதான் அவன் ஒரு உண்மையைப் பேசியிருக்கிறான்.

ஒரு உயிரின் உருவத்தை வேறு உருவாக மாற்ற வீரகேது வல்முடியும ஆனால் மாற்றிய உயிரின் உருவத்தை முன போல பழைய உருவமாக மாற்ற முடிந்ததில்லை. அந்த ரகசியம் அவன மனைவிக்கு மட்டுமே தெரியும் இந்த ரகசியத்தை மனைவியிடம் தெரிந்து கொள்வதற்காகவும்—மனைவி மூலம் சில திடுக்கிடவைக்கும் அற்புதங்களைச் செய்வதற்காகவுமே மனைவியை உயிர் பெற்று எழச் செய்ய வேண்டும் என்று இவ்வளவு பாடுபடுகிறான்.

ஒரேடியாக வீரகேது தன்னால் முடியாது என்று கூறி விட்டதால் அதற்கு மேல் ராஜகுமாரன் ரகுபதி எதுவுமே கேட்கவில்லை மேலும் கேட்டு என்ன பயன்.

அந்த இரண்டாம் நாள் மாலை மகாராணி அழுது புலம்பிக்கிடந்த அறைக்குள் நுழைந்தான். ரகுபதி மன்னன், இறந்தது முதல் அன்ன ஆகாரம் கிடையாது, உறக்கமும் இல்லை கதறி கதறிக் அழுது சோர்ந்து போன நிலை அதனால் மகாராணி மயக்கமடைந்திருந்தார்கள். இந்தச் சேதி இளவரசனுக்கு எட்டியது. தாயாரைக் காண ஓடோடி வந்தான்.

இதுதான் சந்தர்ப்பம் என்று அதே அறைக்கு விரைந்து வந்தான் வீரகேதுவும்..

மயக்கத்தை தெளிவிப்பதாக ரகுபதியை சமாதானப் படுத்தினான் வீரகேது,

கூடிவிட்ட எல்லோரையும் அவ்விடத்தை விட்டு வெளியேறச் சென்னான் தனது மூட்டையைப் பிரித்து ஒரு

பொம்மையை எடுத்தான்' மகாராணியின் நெற்றி—மூக்கு—கழுத்தில் மருந்தைத் தோய்த்தான்.

மகாராணியின் கழுத்தில் ஏராளமான ஆபரணங்கள் இருந்தாலும் தந்திரமாகத் தாலி இணைப்பைக் கழற்றி கைப்பற்றி விட்டதை ராஜகுமார் கவனிக்கவில்லை.

இது வீரகேதுவுக்கு அருமையான சந்தர்ப்பம்.

ஏதோ மந்திரத்தை முணுமுணுத்தவாறே மகாராணியின் மூக்கில் ஊதினான். மகாராணி மயக்கம் தெளிந்து கண் விழித்தார். 'அம்மா' என்று பாசம் பீறிட்டுவர தாயாரை அணைத்துக் கொண்டான்.

அங்கே தன் அறைக்கு திரும்பிய வீரகேது அங்கிருந்து யாரும் சந்தேகிக்காவண்ணம் நழுவினான் அரண்மனைப் பின் பக்க வாசல் வழியாக கிளம்பினான். கடற்கரையை நோக்கி விரைந்தான்.

கடலில்—கரையோரமாக மிதந்த தன் படகில் ஏறினான் தனி ஒருவனாகதுடுப்பை வேகவேகமாய் அசைத்து அசைத்து குறிப்பிட்ட இடத்தை அடைந்தான். முன்போல ஒரு கருக்குப் பையிலிருந்து மாயவில்லையை எடுத்தான் கடலில் போட்டான். கடல்நீரில் குழி விழுந்து வழிவிட்டது.

கடல் மாளிகைக்குள் பரபரப்போடு நுழைந்தான்.

மனைவியின் சடலம் வைத்துள்ள சந்தனப்பெட்டியைத் திறந்தான். அழுகாமல் வாடாமல் வதங்காமல் தூங்குவதைப்போல படுத்திருந்தாள். அவன் மனைவி. அவ்வளவு கச்சிதமாக மனைவியின் உடலைப்பக்குவப் படுத்தி வைத்திருக்கிறான்.

மனைவியின் உடலைப் பார்த்தான். தன் கையில் எடுத்து வந்திருக்கும் ஐந்தாவது தாலியைப் பார்த்தான் ஒரு ஆணவச் சிரிப்பு சிரித்துவிட்டு ஐந்தாவது தாலியை மனைவியின் கழுத்தில் கட்டிவிட்டான்.

ஆனால் மனைவியின் உடலில் ஒருவித சலனமும் இல்லை!
வீரகேது முகம் மாறியது, கண்களில் செந்நிறம் பாய்ந்து குரூரமாக மாறின.

மனைவி உயிர் பெற்ருளில்லை.

வீரகேது கோரமாகச் சிரித்தான்.

'ஆ என் குலதெய்வம் மாடசாமியே ஏன் இன்னமும் என் மனைவி உயிர் பெற்று எழுந்திருக்கவில்லை' என்று ஆகங்காரமாய் கேட்டான்.

ஊ ஹீம்! மனைவியின் உடலில் ஒரு அசைவு கூட ஏற்படவில்லை.

'சரிதான்! அந்த மகாராணி கங்காதேவியைக் கொண்டு வந்து இந்த ராணிகளைப் போல் மிருச்சிலையாக மற்ற வேண்டுமோ?...சரி...சரி...அதையும் செய்து முடிக்கிறேன் என்னைக் காணுமே என்று ரகுபதி.

சந்தேகப் படுவதற்குள் அரண்மனைக்குத் திரும்புகிறேன்

அங்கிருந்து புறப்பட்டான்.

இங்கே அரண்மனையில் வீரகேது எங்கே என்று யாருமே தேடவில்லை. அந்தச் சாவு சந்தடியில் அவன் மீது யாருக்குத் தான் சந்தேகம் வரும் ஏன் தேடப் போகிறார்கள்.

தன்னறையில் வந்து அமர்ந்து கொண்டு நல்லவனாக நடிக்கும் நாடகத்தைத் தொடர்ந்தான் வீரகேது.

விடிந்தது அன்று மூன்றாம் நாள்.

எல்லாவித மரியாதைகளுடன் மன்னன் குலசேகரனின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

மகாராணியின் கழுத்தில் கிடந்த தாலியை அகற்றும் சடங்கு ஆரம்பமாயிற்று.

ராஜகுடும்பத்துப் பெண்கள் படையல் வைத்து... சடங்கை முறைப் படுத்தி...தாலியை அகற்றப் போனார்கள் ஐயோ? தாலியைக் காணுமே செய்தி தீயாக மாறியது மளமள என்று பரவியது.

தாயின் கழுத்தில் கிடந்த தாலியைக் காணும் என்றது மே ரகுபதி அதிர்ந்து போனன். மகாராணியும் நிலை கலங்கிபோனன்.

மகாராணியின் மாங்கல்யம் எவ்வளவு போகியிருக்குமோ என்ற கழுப்பத்தால் ஏற்பட்ட வேதனை எதிலும் வீரகேது கலந்து கொள்ளவில்லை.

மாலிகாணாமல் போன மர்மம் என்ன? யாருக்குமே புரியவில்லை.

ராஜகுமாரன் ரகுபதி வேதனை தாளாமல் தனது அறைக்குப் போய் தனித்து அமர்ந்திருந்தான், அவ்வறைக்கு அந்த நான்கு தேசத்து ராஜகுமாரர்களும் வந்தார்கள் அவர்களும் இப்படி மகாராஜாக்களை கொலை வெறிக்குப் பலி கொடுத்தவர்கள்லவா மகாராணிகள் மறுநாளே காணாமல் போன கொடுமையை அனுபவித்தவர்கள் தானே

அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகத்தை ராஜகுமாரன் ரகுபதியிடம் எடுத்துரைக்கவே வந்தார்கள்.

'ராஜகுமாரா எங்களுக்கு ஒரு சந்தேகம் எங்கள் தகப்பனார்கள் எப்படிக் கொலையுண்டார்களோ அதே மாதிரியே உங்கள் தந்தையார் குலசேகரரும் கொலை செய்யப் பட்டிருக்கிறார்.

'ஆமாம் உங்கள் தந்தையாரோடு சேர்ந்து இதுவரை ஐந்து மகாராஜாக்கள் மர்மமாகக் கொல்லப் பட்டிருக்கிறார்.

இதிலிருந்து எங்களுக்குத் தோன்றுவது என்னவென்றால் யாரோ ஒரே ஒரு மர்ம ஆசாமியால் தான் இந்த ஐந்து கொலைகளும் செய்யப்பட்டிருக்கிறான்.

இனி அடுத்து என்ன நடக்கும் தெரியுமா? மகாராணி கங்காதேவியார் திடீர் என்று காணாமல் போவார்கள்.

'இப்படி நான்காவது ராஜகுமாரன் கூறியவுடனே—'ஆ' என்று அதிர்ச்சி அடைந்து எழுந்தான் ரகுபதி!

'ஆம்! காணாமல் போவார்கள் ராஜகுமார் ரகுபதி அவர்களே நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. நீங்களும் ஏமாந்து போவீர்களானால் நாங்கள் தாய் தந்தையாரை இழந்தது போல் நீங்களும்...' என்று முன்றாவது. ராஜகுமாரன். எச்சரித்ததுமே 'ஐயோ' என்று பீறிட்டு அலறினான். அப்போது அவன் சித்தனையில் ஒரு நிகழ்ச்சி பளீர் என்று தோன்றியது

அவனது பிறந்த நாளன்று அந்தப் பத்து தடியர்கள் விருந்தாளிகளாக வந்து அந்தப்புரத்தை நோட்டமிட்டார்களே அந்த நிகழ்ச்சிதான்

ராஜகுமார் ரகுபதி புதிய எழுச்சி பெற்றான். அது சதியை முறியடிக்க அவன் எழுந்து விட்டான் என்பதை உணர்த்தியது.

அதே சமயம்...?

'மகாராணியைக் காணவில்லை!'

'கங்காதேவியாரைக் காணோம்!'

அரண்மனை பணிப்பெண்கள் ஓடோடி வந்து கதறினார்கள்.

'பார்த்தீர்களா நாங்கள் சொன்னபடியே நடந்து விட்டது' என்றார்கள் அந்த நான்கு தேச இளவரசர்களும்,

மகாராணி இருந்த அறைக்கு ஓடினான் ரகுபதி. பணிப்பெண்களைத் துருவித் துருவி விசாரித்தான். மகாராணி மனக்குழப்பத்தால் தனிமையை நாடியதாகவும் எல்லாரையும் அறையை விட்டுப் போகச் சொன்னதாகவும் நீறு நேரம் கழித்து அறைக்குப் போய் பார்த்தபிறகு மகாராணியைக் காணவில்லை என்பதாகவும்சாட்சியம் அளித்தார்கள்.

பொங்கிவரும் வேதனையை உள்ளே அடக்கியவனாக... மகாராணி படுத்திருந்த மஞ்சம். மஞ்சத்தின் கீழ்ப்குதி பலகணி ஓரமாக ஓர் சுருக்குப்பை கிடந்தது.
சடடென்று பையை எடுத்தான் ரகுபதி,

'ஆ இது வீரகேதுவிடம் இருந்த் பையல்லவா? அதே பைதான்!

உடனே அங்கேயிருந்து புயலாகப் பாய்ந்தான்.

வீரகேது தங்கியிருந்த அறைக்குள் நுழைந்தான். அங்கே அவனிருந்த சுவடுகள் ஒன்று கூட தெரியாமல் அவ்வளவு சுத்தமாக அறையை காலி செய்து விட்டுப் போயிருந்தான் வீரகேது.

அதே நொடியில் ரகுபதியின் சிந்தனை மகாராணிக்கு

மறந்து கடவுளை சாக்கில் அவன்தான் ஆற்றியிருப்பான் என்ற யூகம் பிறந்தது அவனுக்கு.

அப்பாவை ஏன் கொன்ருன்.

ஏன் முதலில் தாலியை எடுத்திருக்கிருன்,

இப்போது அம்மாவைக் காணும் என்ருல் காரணம் வீரகேதுவாகத்தான் இருக்க வேண்டும்,

இதற்குள் ஒற்றர்படை சுறுசுறுப்பாக இயங்கியது ஒரு சில நொடிகளுக்குள்...அவன் மகராணியை தேளில் தூக்கிப் போட்டுக்கொண்டு ஓடிஞன் அரண்மனையை விட்டு என்ற சேதி எட்டியது. கீழ்த்திசைப் பக்கம் போனதாக அடுத்து வந்த சேதி.

ரகுபதி புரவியில் பறந்தான்.

வீரகேது புரவியிலோ வாகனத்திலோ போகாததால் அவனைப் பிடித்து விடலாம் என்ற நம்பிக்கை ரகுபதிக்கு.

மற்ருெரு சிறிய நாட்டுப் படகை இழுத்து அதில் ஏறி... விரைந்தான் ரகுபதி. வீரகேது படகின் வேகத்தை அதிகப்படுத்திஞன்.

குறிப்பிட்ட இடம் வந்தது வீரகேதுவின் படகு நின்றது

தூரத்துப் பார்வையில் மகாராணியைச் சுமந்தபடி வீரகேது கடலில் குதிப்பது தெரிந்தது. அவன் வில்லை யைப் போட்டதோ—கடல்வழி விட்டதோ ரகுபதி பார்வைக்குப் புலப்படவில்லை.

கடலில் குதித்தவன் எங்கே போஞன்.

கடற்கரை நெடுகிலும் அரண்மனையைச் சேர்ந்த காவலர்களும் போர் வீரர்களும் நிறுத்தப்பட்டார்கள் கடலில் விழுந்த எதுவுமே கடல் பிராணிகளால் அழிக்கப்படாமல் இருந்தால் கரையில் ஒதுங்கியே தீரும் அதுவும் இரண்டு மூன்று நாட்களுக்குள்ளாகவே.

மகாராணியின் பிணமோ...வீரகேதுவின் பிணமோ. கரையில் ஒதுங்க வேண்டுமே. இரவு பகலாக காத்தார்கள் அப்படி எங்குமே பிணங்கள் ஒதுங்கவில்லை. கடலில் மூழ்கி மூச்சடக்கி வெகு ஆபத்துக்குப் போய்த திரும்பக் கூடிய

மீனவர்கள் பலரை ஒன்று திரட்டினார்கள். கடலில் மூழ்கி தேடும்படி பணித்தார்கள்.

கடந்த மூன்று நாட்களாக கடல் பூராவையும் அலசிவிட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். அவ்வளவு நுணுக்கமாக வலைவீசித் தேடி விட்டார்கள்.

மகாராணி—வீரகேது பற்றி ஒரு சிறு தடயமும்கூடக் கிடைக்கவில்லை.

வீரகேதுவைப்பற்றி முழுவதுமாகத் துப்புத் துலக்கி அறிய ஒளவாளிகள் படை முடுக்கி விடப்பட்டது. கடல் கரை எங்கும் நிறுத்தப்பட்ட காவலர்களைத் திரும்ப அழைக்காமல் அங்கேயே நிறுத்தச் செய்தான் ரகுபதி மகாராணியோடு வீரகேது மூழ்கியது கடலில் குறிப்பிட்ட இடத்தைச் சுற்றிலும் படை வீரர்கள் படகுகளில் முற்றுகையிட்டிருந்தார்கள் ஏறத்தாழ ஐம்பது வீரர்கள் இரவு பகலாகக் கண் விழித்திருந்தார்கள்.

அங்கே கடலுக்கடியில் கடல் மாளிகையின் உட்புறத்தில் மகாராணியைக் கடத்தி வந்த அன்று நடந்ததும் இது தான்...

'அடப்பாவி என் பிள்ளை உன்னை எவ்வளவு நம்பினன் ஜாலவித்தைகள் கற்றுத்தரப் போகும் குருநாதர் என்று எவ்வளவு பெரிய துரோகம் செய்து விட்டாயடா நாசக்காரா, என் கணவர் உலகம் போற்றும் தர்மம் தவறாத மகாராஜா அவரைக்கொலை செய்ய உனக்கு எப்படித்தான் மனம் வந்ததோ உண்ட வீட்டுக்கே இரண்டகம் செய்த உலுத்தனே இப்போது என்னையும் இங்கே கொண்டு வந்திருக்கிறாய். என்னதான் செய்யப் போகிறாய் உன் நோக்கம்தான் என்ன' என்று ஆத்திரமும் அழுகையும் பொங்கிவரக் கேட்டாள் மகாராணி கங்காதேவி,

எதிரில் இறுமாப்போடு நின்றான் வீரகேது எக்காளமிட்டுச் சிரித்தான்!

'என் நோக்கமா? என் மாயாஜாலா சக்தியால் இந்த உலகத்தையே ஆட்டிப்படைக்கப் போகிறேன் உயிர்களின் உடல் உருவை மாற்றுவேன். மாற்றிய உருவங்களை மறுபடி

முன்போல பழைய உருவமாக்குவேன். என் திறமைக்கு முன்னால் அனைத்து தேசத்து அரசர்களை அடிபணியவைப்பேன் சக்தியின்றிரத்தமின்றி... உயிர்ச் சேதமில்லாமல்போரின்றி நாடுகள் பலவற்றை என் காலடியில் விழ வைப்பேன். அந்த உயரிய சக்தியை நான் அடைய வேண்டும். அந்த ரகசியத்தை ஒரு பெரிய மகானிடமிருந்து கற்று கொண்டிருக்கிருள் என் மனைவி அந்த ரகசியங்களை முழுவதும் என்னிடம் சொல்லுவதற்குள் மாரடைப்பு ஏற்பட்டு இறந்து போனுள். மகிழ்ச்சியால் ஏற்பட்ட அதிர்ச்சி அவளுக்கு மாரடைப்பை உண்டாக்கிவிட்டது. என்னைவிட்டு போய் விட்டாள்' இதோ பார் அவளுடைய பிணம்' என்று சந்தனப் பெட்டியைத் திறந்து காட்டினுன். அதில் மாயாவி யின் மனைவி பிணமாக்கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டாள் மகாராணி கங்காதேவி.

அவள் உயிர் பெற்று எழவேண்டுமானுல் ஐந்து மகாராணி களின் தாலிகள் தேவை அந்த ஐந்தாவது தாலி உன்னுடையது ஏற்கனவே நான்கு தாலிகளை அணிவித்து விட்டேன், இப்போது உன்னை குரங்காகவே மாற்றி அப்புறம் இலை யாக்கி இங்கே வைத்து விடப்போகிறேன்... அப்புறம் என் மனைவி உயிர் பெற்று எழுவாள் ரகசியத்தை என்னிடம் சொல்லப் போகிறுள், அவற்றைத் தெரிந்து கொண்டு எல்லாவல்லமைகளும் பெற்று விடுவேன். அப்புறம் இந்த உலகம் என் காலடியிலே' என்று கொக்கரித்தான்.

'என்னை எப்படி வேண்டுமானுலும் ஆக்கி விடுப்போ இந்த உயிரையே வேண்டுமானுலும் போக்கடித்து விடு ஆனுல் என் மகன் ரகுபதியையும் என் தேசத்தையும் ஒன்று செய்து விடாதே உன் மனைவி உயிர் பெற்று எழ ஐந்து தேச மகாராணிகள் தானே காரணக் அந்த நன்றிக்காகவாவது அந்த ஐந்து தேசங்களை மட்டும் உன் அக்கிரம ஆட்டத் திற்கு உள்ளாகாதே'

'இந்த வேதாந்தம் எல்லாம் எனக்கு வேண்டாம்,

மவு இரக்கமின்றி அழுத்துச் சொன்னுன்.

மறுகணம்...மகாராணிகங்காதேவியைக் காட்டி மந்திர உச்சாடனம் செய்தான்;

மகாராணி கங்காதேவி குரங்கு உருவம் அடைந்தாள். அவள் உயரத்திற்கு ஈடான பெரிய மனிதக் குரங்காகக் காட்சி தந்தாள். கண்ணீர் சிந்த பரிதாபமாகப் பார்த்தாள் குரங்கு உருவில் நிற்கும் மகாராணி அடுத்து ஒரு தூவி எடுத்து குரங்கு மீது வீசினான் மகாராணி கங்காதேவி குரங்கு இல்லையானாள்.

சவப் பெட்டியைத் திரும்பி பார்த்தான் ஏன் இன்னமும் அவள் உயிர் பெறவில்லை அப்படியே விறைந்து கிடக்கிறதே சடலம்.

தான் செய்து முடிந்த கடமைகளில் ஏதாவது தவறு நடந்திருக்குமோ என்று கலங்கினான்.

அப்படியே அசந்து அமர்ந்து விட்டான்.

உக்கிரத்தோடு மாடசாமியை வேண்டினான்.

குலதெய்வமே மாடசாமியே என் மனைவி ஏன் இன்னமும் உயிர் பெறவில்லை என்று கேட்டு விட்டு ஆழ்ந்த நிஷ்டையில் மூழ்கினான்.

கடந்த ஏழு நாட்களாக இருக்கையை விட்டு எழுந்திருக்கவே இல்லை. தாகத்திற்கு ஒரு துளி தண்ணீர் கூட அருந்தாமல் ஆடாமல் அசையாமல் கடும்தவம் பூண்டவனாக அமர்ந்திருந்தான்.

எட்டாம் நாள்...கடல் மாளிகையே கிடுகிடுத்தது ஒரே ஆட்டம் ஆடியது. ஒரு படகைப் போல் இப்படியும் அப்படியும் ஆடியது.

அப்போது அசரீரி எழுந்தது ஓங்காரமாய் ஒலமிட்டது அந்தக் குரல்.

'வீரகேது! வீரகேது!

கடல் மாளிகையில் பூசப்பட்டுள்ள வர்ண பூச்சுகள் ரகுபதியின் தாக்குதலால் உதிர்ந்தன.

வீரகேது உன் தவத்தை மெச்சுகிறேன், நீ மகா பிடிவாதக்காரன் அவசரக்காரனுக்குப் புத்திமட்டு என்பது உன் செய்கையால் தெளிவாகிறது. ஐந்து மாங்கல்யம் தேவை, அந்த மாங்கல்யத்திற்குரிய கணவன்மார்களைத்தான் கொன்றுவிடச் சொன்னேன். நீயோ...என் விதிப்படி மகா

...மூராவை! கொன்று தாலிகளை எடுத்து வந்ததோடு நிற்கவில்லை. அந்த மகாராணிகள் ஐவரையும் இங்கே கொண்டு வந்து சிலைகளாக்கி இப்படி நான் செய்யச் சொன் னேன்.'

என் குலதெய்வ மாடசாமியே என்னை மன்னிக்க வேண் டும் என்று விழுந்து விழுந்து வணங்கினான்.

'வீரகேது உண்மையில் உன்னுடைய குலதெய்வம் நான் அல்ல.'

'அப்படியானால் நீ யார்?'

'நான்...உன் மனைவிகூட யாரிடமோ பரமரகசியங்களைக் கற்றுக் கொண்டு ஓடிவந்தாள் என்று நம்பிக் கொண்டிருக் கிறாய். மூடனே எந்த மாயாவியிடமும் மகானிடமும் கற்றுக் கொள்ளவில்லை. அவள் உடலில் புகுந்த ஆவி தேவ ரகசியங்களை அவளுக்கு போதித்த ஆவி.'

'அப்படியா? நீ யாருடைய ஆவி! என் மனைவியின் உடலில் புக காரணமென்ன?

காரணமா நான்தான் மூக்கன் மாயாவி! விதர்ப்ப நாட்டு இளவரசியால் வீழ்த்தப்பட்ட மூக்கன் மாயாவி

அன்றுமுதல் பேயாக அலைகிறேன். விதர்ப்ப நாட்டின் இளவரசி மற்றும் உறவினர் எங்கெங்கோ ராஜாக்களாக இருக்கின்றார்கள். உன் மூலம்தான் ஐந்து மகாராஜாக்களை அழிக்கச்செய்தேன். இன்னும் என் காரியம் முடியவில்லை இனி நடக்க வேண்டிய விஷயங்களை உன் மனைவியிடமே சொல்கிறேன் அதன்படி நட...' என்றது ஆவி.

,வீரகேதுவுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது.'

உடனே...தன் மனைவி அருகே சென்று மோனு—மோனு என்று அழைத்தான்.

என்ன ஆச்சரியம் பெட்டியிலிருந்து எழுந்து வெளியே வந்தாள்.

'மோனு இனி நான் அடுத்து என்ன செய்யவேண்டும்.'

'இதோ இவர்களை உடனே அந்த அந்த உருவங்களாக மாற்றுங்கள் என்ருன்.

மந்திரக்கோலை அசைத்தான் குரங்கு, நாய், நரி, கரடி, ஓநாய் ஐந்து மிருகங்கள் காட்சி தந்தன.

'மோனு! இவர்களை முன்புபோல மகாராணிகளாக மாற்ற முடியுமா'

'முடியாது'

பட்டிவிக்ரமாதித்தன் அருளால் விதர்பநாட்டு இளவரசி நல்ல மந்திரக்கோலையும், கெட்ட மந்திக்கோலையும், வழங்கியிருக்கிருர். அந்த இரண்டு மந்திரகோலையும் இரும்புக் கோட்டைக்குள் பத்திரப் படுத்தி வைத்திருக்கிருள். அவை கிடைத்தால் மாண்ட உயிரை மீண்டும் பெறலாம்.

'அப்படியா, அந்த இரண்டு மந்திரகோலையும் நாம் எடுத்துவர முடியுமா! மோனு.

'அவசரப்படாதீர்கள். விதர்ப்பநாட்டு இளவரசியை மயக்கி இங்கே கொண்டு வரவேண்டும், அவள் உயிரைப் பணயமாக வைத்துக் கொண்டு மந்திரக்கோல் இரண்டையும் தருகிருயா உயிரை இழக்க தயாரா என்று கேட்க வேண்டும்.

அப்படியே செய்வோம். அவளைக் கொண்டு வருவது ஒன்றும் எனக்கு பெரிய காரியமல்ல...'

அவ்வளவு சாதாரணமாக என்ன வேண்டாம் முன்பு அவ்வளவு இளவரசிதான் இப்போது விதர்ப்ப நாட்டின் மகாராணி அவ்வளவு எளிதாக மகாராணியே மயக்கிவிட முடியாது'

முடியும் உலகிலேயே மிகப்பெரிய ஆண் அழகன் யார் தெரியுமா? மகேசபுரி இளவரசன் ரகுபதி அவன் உருவில் போவேன மகாராணியை மயக்குவேன் ஏமாற்றி இங்கே கூட்டி வருவேன்.

'அது சரி ரகுபதி உருவை மாற்றிக் கொள்ள இப்போது உங்களின் சிறிய மந்திரகோல் போதும். ஆனால் மீண்டும் சுய ரூபத்தை பெற முடியாது'.

'ஏன் முடியாது. அவளிடமுள்ள மந்திரக்கோலை நான் தான் கொண்டுவந்து விடுவேனே!

நல்லயோசனைதான் ஆனால் மிகமிக எச்சரிக்கை வேண்டும். நாளைக்கே புறப்படுங்கள்...ம்...இதோ இந்த ஐந்து பேரையும் கடலுக்கு மேலே கொண்டு போய் விடுங்கள். அதுகளாகவே அதனதன் நாட்டு அரண்மனைக்குப் போய் சேர்ந்து விடும்.

'ஆகட்டும் அப்படி செய்கிறேன்'

'கொஞ்சம் பொறுங்கள். கடல்மாளிகைக்கு மேலே ரகுபதி ஆட்கள் முற்றுகையிட்டிருக்கிறார்கள் நீங்கள் போனால் உங்களைக் கொன்று விடுவார்கள்,' என்றாள்.

'ஓகோ ஆபத்து தலைக்குமேலே இருக்கிறதா? சற்று நேரம் யோசித்துவிட்டு பயப்படாதே...மோனு சரியான இடத்தோடுதான் போகிறேன்' என்று கூறிவிட்டுப் படிக் கட்டுகளில் ஏறினான். மனைவி மோனு எவ்வளவோ தடுத்தும் வீரகேது கேட்கவில்லை.

கடலில் சுழல் ஏற்பட்டு வழி பிறந்தது மேலே வந்து தலையைத் தூக்கினான்.

'அதோ! நயவஞ்சகன்! துரோகி அயோக்கியன்' என்று படை வீரர்கள் குரல் எழுப்பினார்கள் ஆயுதங்களை உடனே வீரகேது மீது பிரயோகித்திருந்தால் இதற்குள் அவன் பிணமாகியிருப்பான். ஆனால் படை வீரர்களோ வீரகேதுவை உயிரோடு பிடித்துப் போய் இளவரசரிடம் ஒப்படைக்க ஆசைப்பட்டார்கள். அதுவே அவர்களுக்கு தோல்வியாக முடிந்தது.

வீரகேது வந்த வேகத்திலேயே எலும்பு மந்திரக்கோலை அவர்கள் பக்கம் சுற்றிக்காட்டி மீன்களாக மாறக் கடவது என்றான்.

மறுகணம் ஐம்பது வீரர்களும் மீன்களாக மாறினார்கள். கடலில் மூழ்கினார்கள்.

வீரகேது 'ஹ் ஹா...' என்று பேய்த்தனமாகச்சிரித்தான்

கணவன் உயிரோடு திரும்புவானா என்று பதறிப் போய் படிக்கட்டு வழியைப் பார்த்தபடியே நின்றாள் போ வீரகேது திரும்பி விட்டான். மோனாவுக்கு ஆச்சரியம்— ஆனந்தம்.

ஓடிப்போய் கணவனைக் கட்டிக் கொண்டாள். வீரகேதுவும் ஆறுதலாக அவளைத் தட்டிக் கொடுத்தான்.

மோனா கடல்மேல் தளத்திலிருந்து வீரர்களை மீன்களாக்கி விட்டேன். மீண்டும் வீரர்கள் வருவதற்குள் நான் விதர்ப்பநாடு போய் விடவேண்டும் நீ அல்லும் பகலும் கவனமாக இருக்க வேண்டும் மூன்று நாட்களில் திரும்பி விடுவேன். வரும் போது கடல் மேல் தளத்தில் மீண்டும் வீரர்கள் காவல் புரிவார்களே யானால் அவர்களையும் மீனாக்கி விட்டு இங்கே விதர்ப்ப நாட்டு இளவரசியோடு வந்து சேருகிறேன் இப்போது இந்த மிருகச்சிலைகளை எடுத்து போய் வெளியே விட்டு விட்டுப் போகிறேன் என்று சொல்லி விட்டு மோனாவிடம் விடை பெற்றான்.

மிருகச்சிலைகளை குரு பெரிய மூட்டையாகக் கட்டித் தோளில் தொங்க விட்டுக் கொண்டு கிளம்பினான்.

சவுக்கு தோப்புகள் அடர்ந்த கடற் கரைக்கு வந்தான் படகை நிறுத்தி கரை ஏறினான் மிருக உருப் பெற்ற சிலைகளை வரிசையாக நிறுத்தி வைத்தான், எழும்பு மந்திரக்கோலைக் காட்டி அந்தந் மிருகங்களாக ஆகும்படி கட்டளையிட்டான்.

அவை குரங்கு நாய் கரடி நரி ஓநாய் என்ற மிருகங்களாக மாறின...ம்...அவரவர் தேசத்துக்குப் போங்கள் அங்கே...

பிறர் பேசுவது நடப்பது செய்கைகள் யாவையும் நீங்கள் யார் என்று காட்டிக் கொள்ள முடியாது உங்கள் நாடுகளை என் வசப்படுத்திக் கொண்டபிறகு...விதர்ப்ப நாட்டு இளவரசியால் எனக்கு மந்திரக்கோலால் உங்களை முன்போல மகாராணி உருவம் பெறச் செய்வேன். இப்

போது ஓடுங்கள் அவரவர் தேசத்துக்கு என்று விரட்டிவிட்டு விஷமத்தனமாக சிரித்தான்

அவை கொஞ்சம் தூரம் ஒன்ருக ஓடின. அப்புறம் தனித்தனியே பிரிந்து அவரவர் தேசத்தை நோக்கி விரைந்தன

வீரகேது சவுக்குத் தோப்பினூடே நடந்து போனன். வழியில் சவுக்கு மரத்தில் குதிரை கட்டப்பட்டிருப்பதை பார்த்தான்.

இதுதான் தக்க தருணம். குதிரை அவிழ்த்து அதன் மேல் அமர்ந்தான். குதிரையைத் தட்டி விட்டான். அது காற்றுடனும் விரைவாகப் பறந்தது.

,மன்னர். மன்னு! எங்கள் கண்ணை எங்கள் கண்களா லேயே நம்ப முடியவில்லை. மாயாவி வீரகேது கடலில் எந்த இடத்தில் திடீர் என்று கீழே குதித்து மறைந்தானே அதே, இடத்தில் தோன்றினன்.

'மேலே வந்தவனை நமது படைவீரர்கள் பிடித்து வரத் தயாரானுர்கள். மறுகணம் நமது படைவீரர்கள் ஐம்பது பேரும் மாயமாய் மறைந்து விட்டார்கள். எங்கே போனுர் கள் என்ன ஆனுர்கள் என்று தெரியவில்லை. அறையில் காவலுக்கு நின்ற வீரர்களை கூட்டிக் கொண்டு கடலில் அதே இடத்துக்கு விரைந்தேன். அதற்குள் மாயமாய் மறைந்து விட்டான்.

'அப்படியா கடலின் அடியிலே அவனுக்கு தங்குமிடம் இருக்கிறது. நமது அடுத்த முயற்சி அந்த மர்ம இடத்தைக் கண்டுபிடிப்பதுதான். இனிநானே இம் முயற்சியில் இறங் கப் போகிறேன்'

என்று சபதம் ஏற்கும் தோரணையில் கூறினன் இளவரசன் ரகுபதி ஒற்றர் படைத்தலைவரும் அதுவே சரி என்கிற மாதிரி தலை குனிந்து வணக்கம் கூறினர்,

அதே சமயம் பலகணி வழியே உள்ளே குதித்த மனிதக் குரங்கு ஊர்...ஊர் என்று ஓடிவந்தது. குரங்கின் இடீர்

வருகையால் கலவரம் அடைந்த ரகுபதி—சட்டென எழுந்து நின்றான். மனித உருத்துக்கு நிகராக பெரிய மனிதக் குரங்காக இருப்பதால் அதனால் ஆபத்து நேரக் கூடும் என்று அஞ்சினான். ஆனால் குரங்கைக் கொன்றால் பாவம் என்பார்கள்.

ஆதலால் எடுத்த வாளை மீண்டும் உறையில் போட்டு வைத்தான்.

அவன் எதிர்பார்த்தபடி ஒன்றுமே செய்யவில்லை.

ரகுபதியைப் பார்த்து கண்ணீர் வடித்தது.

குரங்கு தன்னை பார்த்து ஏன் அழுகிறது என்று யோசித்தான்—

அவன் ஒரு தீர்மானத்திற்கு வருவதற்குள் குரங்கு குபீர் எனப் பாய்ந்து இளவரசன் ரகுபதி கையிலிருந்துவிலைகள், அடங்கிய பையைப் பறித்துக் கொண்டது வாசலுக்கு ஓடியது.

வாசலில் நின்றபடி ரகுபதியைப் பார்த்துத் தலையை அசைத்தது ரகுபதியைத் தன்னோடு அழைக்கிறதோ!

ரகுபதி அந்த பையைத் திரும்பப்பறிப்பதற்காகப் பாய்ந்தான் அது ஓட ஆரம்பித்தது.

ரகுபதி குரங்கைத் துரத்தினான். அது ஓடியது அவன் விரட்டிக் கொண்டே பின் தொடர்ந்தான் குரங்கு நேராகக் கடற்கரைக்கு ஓடியது.

ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து படகில் ஏறிக் கொண்டது ஓடோடி வந்த ரகுபதியும் அதே படகில் ஏறினான் இப்போது குரங்கு படகை விட்டு நகரவே இல்லை. அதுவே துடுப்பை எடுத்து படகை ஓட்ட முயன்றது குரங்கு என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஏதோ என்று நடக்கப் போகிறது. குரங்கு நமக்கு உதவு இறது அல்லது அந்த வீரகேது ஏவிவிட பட்டிருக்கும் குரங்காக இருக்குமானால் நம்மை அபாயத்தை நோக்கி இழுத்து

செல்கிறது என்று அர்த்தம் இனி எது நடந்தாலும் சரி இரண்டிலொன்று தானே பார்த்து விடுவோம் என்ற துணிச்சல் துடுப்பை எடுத்தான் அசைத்தான் படகு புறப்பட்டது குரங்கு வாஞ்சையோடு அவன் மடியில் படுத்துக் கொண்டது. குரங்கு வடித்த கண்ணீர் அவன்மடியைஈரமாக்கியது ஒரு கையால் குரங்கைத் தடவிக் கொடுத்தான். ரகுபதி இவ்வளவு பாச உணர்வோடு நம்மோடு பழகுகிறதே இதனால் நமக்கு அபாயம் நேராது என்று மனதை தேற்றினான்.

கடலில் அதே இடம்!

குரங்கு தன் கையில் கெட்டியாகப் பற்றியிருந்த சுருக்குப் பையைப் பிரித்து ஒரு வில்லையை எடுத்தது கடலில் போட்டது வில்லையை முன்பு மகாராணியாக இருந்த போது வீரகேதுவின் செய்கை பூராவையும் கவனித்து வந்திருக்கிறது.

கடல் கொந்தளித்து எழுந்தது.

அந்த இடத்தில் குழி விழுந்தது.

வழி தோன்றியது.

குரங்குதான் முதலில் உள்ளே இறங்கியது அதே மாதிரி ரகுபதியும் இறங்கினான்.

இருவரும் விர் என்று உள்ளே இழுத்து செல்லப் பட்டார்கள்.

அடுத்து படிக்கட்டுகளில் இறங்கி கடல் மாளிகையை அடைந்தார்கள்,

அதே சமயம் வீட்டில் நிறைய பலகாரங்களை நிரப்பித் தின்று கொண்டிருந்த மோனா திடுக்கிட்டு எழுந்தாள்.

'ஆ நீயா? ஏய் குரங்கே இவன் யார் இவனை ஏன் இங்கே கூட்டி வந்திருக்கிறாய்' என்று அதட்டினாள் அவ்வளவுதான் அவள் கேட்டவாய் மூடுவ[redacted]குள் எகிறிப் பாய்ந்து அவள் கன்னத்தில் ஒரு அறை விட்டது.

'அய்யோ அம்மா என்னையா அடிக்கிறாய் அய்யேப்

எலும்பு மந்திரகோலை என் கணவர் கொண்டு போய் விட்டாரே இந்நேரம் அது என் வசம் இருந்தால் உன்னை மறுபடி குரங்குச் சிலையாக்கி இருப்பேனே ஏய்குரங்கே நான் தான் சிலையாக மாற்றப்பட்டிருந்த உன்னை உயிருள்ள குரங்காக்கி உன் தேசமான மகேசபுரி தேசத்துக்குப் போகட்டும் என்று கருணை காட்டியவள் நன்றி கெட்ட குரங்கே என்னை அடிக்கிறாயா யாரோ ஒருவனைக் கூட்டி வந்திருக்கிறாயே மகாராணி என்ற திமிர் வந்து விட்டதோ?' என்று மோனு கேட்டாள்.

'ஆ மகாராணியா' என்று அதிர்ச்சி யுற்றான்...இவ்வளவு நேரம் பேசாமல் நின்ற ரகுபதி

'ஆம் இந்தக் குரங்குதான் மகேசபுரி மகாராணி? என் கணவர்தான் இப்படி மாற்றியிருக்கிறார்.

'ஆ அம்மா' என்று ஓடிப் போய் குரங்கை கட்டிக் கொண்டு அழுதான் 'அம்மா அம்மா என்றுகதறினான் குரங்கும் கேவிக் கேவி அழுத்து.

இப்படியே சில நாழிகைகள்.

அப்புறம் பற்றிய நெருப்பைப் போக் குபீர் என்று எழுந்தான்,

'ஓகோ நீ தான் மாயாவி வீரகேதுவின் மனைவியோ என் தந்தையை கொன்று விட்டு என் தாயரையும் கடத்தி வந்து குரங்காக ஆக்கிய அக்கிரமக்காரனின் மனைவியா...' என்று ஆவேசமாகப் பேசினான்.

'வாலிபனே வரப்போகும் விளைவு தெரியாமல் துள்ளாதே என் கணவருடைய கோபத்தை தூண்டாதே அவர் நினைத்தால் உன் நாட்டையே நாசமாக்கி விடுவார்

நடக்காது நம்மிடம் இதுவரை உங்கள் நயவஞ்சக நாடகம் ஒரே மர்மமாக இருந்தது எனக்கு எல்லாமே புரிந்து விட்டது இனி உங்களை வேரும் வேரடி மண்ணும் இல்லாமல் அழிப்பதுதான் என் முதல் வேலை...ம்' என்று இளவரசன் மோனு அருகில் நெருங்கினான்.

பிடிக்கிறது மோனாவரோ

சமயம் குரங்கு உருவிலிருந்து—மகாராணி...'

அதகேட்டுப்பிடித்துக் கொண்டாள் ஒரு கயிற்றை எடுத்து மோனாவைக் கட்டினான்...ரகுபதி.

உன்னை உயிரோடு அடைய உன் கணவன் விரும்பினால்... என்தாயாரை பழைய உருவமாக ஆக்கட்டும். அவவ என்னிடம் வந்து சரண் அடையும் வரை ..நீ என்னிடம் சிறை யிருப்பாய்...'

மறுகணம்...குரங்கு மோனாவை அப்படியே தூக்கியது.

ரகுபதியும் குரங்கும் படிக்கட்டுகள் வழியே மேலே ஏறினார்கள்.

மகேசபுரி தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டாள் மோகனா.

அடுத்து கடல் மாளிகைக்கு வீரவேது திரும்பியதும் அதை அடியோடு அழிக்க வழி என்ன ரகுபதி ஆராய்ந்தான் அமைச்சர் படைத்தளதி ஆகியோரை அழைத்தான். அவர்களுடன் கலந்து பேசினான்,

கடல்மாளிகைக்குள் படைவீரர்களை அனுப்பி...தீயிட்டு சாம்பலாக்கி விடலாமா? என்று தீர்மானித்திருந்தான்.

அதே சமயம்...

விதர்ப்பநாட்டு இள்வரசி தனது அந்தரங்க தோழிகள் இருவருடன் பவனத்தேரில் உல்லாசப்பயணம் மேற் கொண்டிருந்தாள் நகருக்கு அப்பால் மூன்று காத தூரத்தி லுள்ள வஸந்த மண்டபத்திற்கு போய்க் கொண்டிருந்தாள்

ரதத்தில் இருக்கும் மூன்று பேருமே பெண்கள் விதர்ப்ப நாட்டு இளவரசி உட்பட பெண்கள்தானே அதலபாதளத்தை நோக்கி விரைந்து பறக்கும் ரதத்தை நிறுத்த முடியாமல் தவித்தார்கள் நடுக்கமும் வந்து விட்டது.

இன்னும் சில அடிகள் எடுத்து வைத்தால் பள்ளத்தாக்கில் குப்புற விழத்தான் வேண்டும்.

ராஜகுமாரி எவ்வளவோ முயற்சி செய்தால் முடியவில்லை என்ன ஆச்சரியம் திடீரென்று ரதம் மலை உச்சியில் மயிரிழையில் போய் நின்றது.

விதர்ப்பநாட்டு இளவரசி, தோழிகள் அனைவரும் மலைத்து விட்டார்கள். சற்று தொலைவில் ரதத்திற்கு பின்னுல் குதிரையில் ரகுபதி குதிரையில் அமர்ந்திருந்தான்.

குதிரை முன்னே செலுத்தினன் ரகுபதி ரதத்தின் பக்க வாட்டில் குதிரையோடு வந்து எட்டிப் பார்த்தான்.

'இளவரசியாரே! இளவரசியாரே!' என்று அன்பாக அழைத்தான்,

ரகுபதியை பார்த்தாள் இளவரசி.

அவள் இமைகள் படபடவென்று அடித்துக் கொண்டன. ரகுபதியும் பார்த்தான் அவள் நாணத்துடன் தலை கவிழ்தாள்.

ரகுபதியின் கம்பீரம்...கட்டழகு இளவரசி மனதைக் கவர்ந்தது.

'நான் கவனித்திருக்கா விட்டால் பள்ளத்தாக்கில் மூவரும் ரதத்தோடு பள்ளத்தாக்கில் விழுந்திருப்பீர்கள். நான் தான் என் சக்தியால் இதே நிலையில் அப்படி நிறுத்தினேன்' என்ருன் ரகுபதி.

'அப்படியா! நீங்களா எங்கள் உயிர்காத்த உத்தமர்'

'ஆமாம் நானேதான் இதோபார்...' என்று இடுப்பிலிருந்த எலும்பு மந்திரக்கோலை எடுத்து...ஏதோ முணு முணுத்துவிட்டு பின் போகும்படி ரதத்தை நோக்கி சைகை காட்டினன். ரதம் பின்னுக்கித்தாகை நகர்ந்தது.

'ம் நில் அப்படியே' என்று எலும்புக்கோலை காட்டினுன்.

இப்போது அவர்கள் உண்மையை ஒப்புக் கொண்டார்கள். என்னுடைய உயிரைக்காப்பாற்றிய உங்களை என்றுமே மறப்போம்' என்றாள் இளவரசி.

எலும்புமந்திரக் கோலால் ரதத்தை மெதுவாக கீழே இறக்கினான், சமதரையில் மெதுவாக பயணம் செய்கிற மாதிரி குதிரை நடந்தது.

அவன் யார்? கையில் மந்திரக்கோல் இருக்கிறதே.

இப்போது புரிகிறது அவன் ரகுபதி அல்ல! மாயாவி வீரகேது விதர்ப்ப நாட்டு இளவரசியை ரகுபதி வடிவில் மயக்கிக் கூட்டிப் போக வந்த வீரகேது.

ரகுபதி வடிவத்தில் இருந்ததால்தான் விதர்ப்ப இளவரசி அவனைக் கண்டதுமே மனதைப் பறிகொடுத்தாள்.

'நீங்கள் யார் என்று அறியலாமோ!' என்று வெட்கத்தோடு கேட்டாள்.

நான் மகேசபுரி நாட்டு இளவரசன் ரகுபதி ஒரு முக்கிய காரியமாக வந்தேன். வழியில் உங்கள் ரதம் பாதாளத்தில் விழப் போவதைப் பார்த்தேன். குதிரையை வேகமாய் விரட்டி வந்து இந்த மந்திரக் கோலின் சக்தியால் விழப் போன குதிரைகளை அந்தரத்தில் நிறுத்தினேன்.

உங்களைக் காப்பாற்றினேன் ஆமாம் நீங்கள் யார் என்று சொல்லவில்லையே—

நான் விதர்ப்ப நாட்டு இளவரசி ஆனால் இந்த இளம் வயதிலேயே முடி சூட்டிக் கொண்டதால் மகாராணியாக பட்டம் வகிக்கிறேன்

'மகாராணியா மெத்த மகிழ்ச்சி உங்களைச் சந்திக்க நேரிட்டது, என் பாக்கியம்'

'தங்களைச் சந்திக்க நேரிட்டது எனக்கும் பாக்கியமே

மகாராணி நான் போய் வருகிறேன்...'

'ஊஹீம் போகாதீர்கள் எங்கள் உயிரைக் காப்பாற்றிய உங்களை வழியிலே பிரிந்து போக விட்டு விடுவோமா அது பண்பாடாகுமா? வாருங்கள் அரண்மனைக்கு எங்கள் விருந்தாளியாக இருந்து விட்டு அப்புறம் புறப்படுங்கள்' என்று வேண்டு கோள் விடுத்தாள் விதர்ப்ப தேசத்து மகாராணி. இந்த சந்தர்ப்பத்தை விடுவான்? உடனே சரி என்றான்.

குதிரையில் ரகுபதி வடிவிலுள்ள வீரகேது முன்னே செல்ல...இளவரசியின் ரதம் பின்னே வந்தது.

அரண்மனை வந்தடைந்தார்கள்,

ஒரு தேசத்தின் ராஜகுமாரெனுக்கு என்தனன்னமரியாதைகள் செய்வார்களோ அத்தனை மரியாதைகளையும் செய்து ரகுபதி உருக் கொண்ட வீரகேதுவை வரவேற்றார்கள்.

மகேசபுரி மன்னர் குலசேகரன் கொலையுண்ட பிறகு ரகுபதிதானே ஆட்சிப் பீடம் ஏறியிருக்கிறான். அதனால் ரகுபதியும் மகாராணியாகியிருக்கிறாள்.

இருவரும் மகாராஜா மகாராணிதான்.

ஆதலால் ஒருவரை ஒருவர் விரும்பினார்கள் நெருங்கிப் பழகினார்கள்.

உண்மையை அறிய மாட்டாள் மகாராணி வந்திருப்பவன் உண்மையான ரகுபதியா வினன் வீரகேது அல்லவா தம்பி மோசம் போகிறாள் பாவம் அவள்நிலை பரிதாபமானது

இரண்டே நாட்களில் ஒருவரை ஒருவர் விரும்புகிறார்கள் பேசிக் கொண்டார்கள்.

'மகேசபுரி இளவரசே...! ஏதோ ஒரு முக்கியகாரியமாகபயணம் மேற் கொண்டதாக நேற்று தெரி வித்தீர்களே அது என்ன காரியம்'

'என் தந்தை குலசேகரன் மாண்டார் என்று மகாராணிக்குத் தெரியுமே—'

தெரியும். துக்கம் விசாரிக்க முடியாமல் காய்ச்சலில் கிடந்தேன். அதனால்தான் எங்கள் முதலமைச்சரை தங்களிடம் துக்கம் விசாரிக்க அனுப்பி வைத்தேன்.'

'ஆம் வந்தார் விசாரித்தார் நன்றி.

'பரவாயில்லை எங்கள் தந்தையாரின் மரணத்திற்கு பிறகு?'

'ஒரு மாயாவியை மகான் என்று நம்பி என் அரண்மனையில் வைத்திருந்தேன். அவன்தான் என் தந்தையை கொன்றவன்? அடுத்து என் அம்மாவை முன்போல் பார்க்க வேண்டும்...'

'அப்படியா?...' என்று கூறிவிட்டு ஏதோ யோசிக்கு ஆரம்பித்தாள் கடந்தகால நிகழ்ச்சிகள் விதர்ப்புமகாராணியின் மனதில் சித்திரம் போல் தோன்றின. முன்பு முக்கண் மாயாவி தன்னை தாயக்கியதையும். சிங்கத்தின் உதவியால் பட்டிவிக்கிரமாதிதன் அருளால் நன்மைக்காகவே பயன்படும் மந்திரக்கோலைப் பெற்றுக் கொண்டு நாடு திரும்பியதையும் காட்சிகளாக மனதில் கண்டாள்.

'கவலைப்படாதீர்கள் இளவரசே அதற்கு வழி என்னிடம் இருக்கிறது'

'என்ன? என்ன மகாராணி!'

'நல்லவேளை அந்த மந்திரக்கோலை இருப்புக் கோட்டையில் பத்திரமாகப் பாதுகாத்திருக்கிறேன்'

'மந்திரக்கோலா? இரும்பு கோட்டையா!'

'ஆம்! நன்மைக்கு மட்டும் பயன்படக்கூடியது அதன் மூலம் உங்கள் தாயாரைக் காப்பாற்றலாம், முன்பு எங்கள் வாழ்க்கையிலும் ஒரு முக்கண் மாயாவி இப்படித்தான் பல அக்கிரமங்களைச் செய்தான். முடிவில் அவனை நான்தான் வீழ்த்தினேன்'

'பலே! பலே! நீ மகாகெட்டிக்காரி, எனக்கு உதவி செய்ய நீயாகவே முன் வந்ததை அறிந்து ஆகமகிழ்கிறேன்.

# ஏதோ ஒரு மர்மம்

'ஓ! நான் தயார்!' என்றான் துள்ளிக் குதித்தபடி அவன் மனமாரபாராட்டுகிறேன் என் அம்மாவை பழைய வடிவத்திற்கு மாற்றிக் கொடுத்தால் உன்னை மணமுடித்து மனைவியாக ஏற்றுக் கொள்வேன்' என்று கூறியவுடனே வெட்கத்தால் தலை கவிழ்ந்தாள்.

'ராஜகுமாரரே உங்கள் அம்மாவைக் காப்பது மட்டுமல்ல, தீமைக்காக பயன்படும் மற்றொரு மந்திரகோலால் அந்த மாயாவியையும் பூண்டோடு அழிப்பேன். நாளைக்கே நான் புறப்படலாமா!'

போட்ட வஞ்சகத்திட்டத்திற்கு இளவரசி பலியாகி விட்டாளே.

எந்தச் சதியைச் செய்து முடிக்க வந்தானோ அது சுலபமாக நிறைவேறுகிறது.

இரும்புக் கோட்டை வாசற்கதவை பூட்டுக்கூட துருப்பிடித்துப் போயிருந்தது, முக்கண் மாயாவி சுவத முடிந்ததுமே மந்திரக்கோல் இரண்டையும் பத்திரப் படுத்திய போது பூட்ட ப்பட்ட கதவு இது இப்போதுதான் திறக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

இரண்டு மந்திரக்கோலையும் எடுத்துக் கொண்டாள். விதர்ப்பதேச மகாராணி!

குதிரையில் ஏறி அமர்ந்து கொண்டாள் குதிரை பறந்து சென்று கடற்கரை போய் சேர்ந்தது.

ஏறி வந்த குதிரையை ஓர் மறைவிடத்தில் கட்டிப் போட்டான்.

கடற்கரைக்கு ஏன் கூட்டி வந்திருக்கிறார் இதுமகேசபுரி நாடுதானே நேராக அரண்மனைக்குக் கூட்டிப் போகாமல் இங்கே எதற்காக...

மகாராணிக்கு குழப்பம் ஆரம்பமானது.

அவன் சொந்தப் படகை வரும் போது எங்கோ ஓரிடத்தில் விட்டு விட்டுத்தானே விதர்ப்பநாடு போனான்,

இப்போது இங்கே படகுக்கு எங்கே போவன் ஒரு கட்டு மரம் கரையில் கிடந்தது, அதை கடலுக்குள் தள்ளிமிதக்க விட்டான். அதில் மகாராணியை ஏறச் சொன்னான்.

'இளவரசே அரண்மனைக்கு போகாமல் கடல் பயணம் எதற்காக' என்று கேட்டாள். விதர்ப்ப நாட்டுராணி.

கடலில் ஒரு முக்கிய வேலை இருக்கிறது குரங்காக மாறிய என் தாய் கடலில் ஓர் இடத்தில இருக்கிறாள்...வா...என்று கையைப் பற்றி இழுத்து கட்டு மரத்தில் ஏறினான் அது நகர ஆரம்பித்தது விரைவாகச் செலுத்தினான்.

கடலில் அதே இடம்...!

கடல மாளிகை...உட்புறம். சுவரை தூண்களை இரும்புத் தடியால் தட்டித் தட்டிப் பார்த்தால—ரகுபதி கருங்கல் பாறையால ஆமை மாளிகை மாளிகையாக படைத்திருக்கிறார் ஆயிரமாயிரம ஆண்டு கட்டு முன்பே இது கட்டப் பட்டிருக்க வேண்டும். கடல் மேல் தலத்திலிருந்து

இங்கே வர கடல் நீரில் வில்லையைப் போட்டு பாதை கண்டு வருவது மந்திர சக்தியினால்.

இது யோக...இம்மாளிகைக்கு உள்ளே வர ஒரு சுரங்கப் பாதை தரைப் பகுதி வழியாக இருக்கவே வேண்டும். அப்பாதை கடற்கரையில் முடிவதாக அமைத்திருக்கும் கடல் நீருக்கு பராமலே கரையிலிருந்தபடியே சுரங்கவாசல் வழியாகப் புகுந்த—நடந்தே...இந்த கடல் மாளிகைக்கு வர முடியும் இப்படியொரு வசதியோடு திட்டமிட்ட மாளிகையைக் கட்டியிருப்பார்கள் முன்னோர்கள்.

# ஆ என்ன அதிசயம்

மாயாவி வீரகேதுவோ தனது மாயஜால வில்லை மூலம் கடல் நீரில் பாதை உண்டாக்கிருக்கிறான் போகிறான் இது அவன் கண்ட குறுக்கு வழியே தவிர முறையான வழியல்ல.

இவ்வாறு தீர்மானித்தாரை ரகுபதி. கடல் மாளிகை நன்றாக ஆராய்ந்த பிறகு,

இம்மாளிகையை அழிக்க வேண்டியதில்லை இங்கே வரக்கூடிய சுரங்கப்பாதையைக் கண்டு பிடித்து விட்டால் அவ்வழியாக வரப்போக வசதி செய்து விடலாம். இம் மாளிகையை அதிசய கண் காட்சி மாளிகையாக்கி அனைவரும் கண்டுகளிக்கும் கலைக்கோயிலாக மாற்றலாம் இதுவே சரியான எண்ணம்.

அன்று வெகு நேரம் ஆராய்ந்த பிறகு மாளிகையின் மேற்குபுறத்தே.

ஒரு நீண்ட கற்பாறை நான்கு புறங்களிலும் கீரல் விட்டிருப்பதைக் கண்டான். பலங் கொண்ட மட்டும் அப்பால் இழுத்து மேலும் இடைவெளி உண்டாக்கினான். ரகுபதியின் யூகம் தப்பவில்லை. அது சுரங்கப் பாதையே அதன் வழியே போனால் கண்டிப்பாக கரையை அடையாளம் உள்ளே போக மேலும் பாறைக் கதவை நகர்த்திய போது படிக்கட்டுகளில் காலடி ஓசை!

சட்டென்று அந்தப் பாறை இடுக்கில் கஷ்டப்பட்டு நுழைந்து அப்பால் நின்று கொண்டான்.

'ஆ! என்ன ஆச்சரியம் ரகுபதி திடுக்கிட்டான். தூக்கி எங்கோ எறியப்பட்டது மாதிரி பதறினான்.

அங்கே...தன்னைப் போலவே ஒருவன் வந்திருக்கிறானே என்று குழம்பினான்.

ஆம் வீரகேது ரகுபதி உருவத்தில்தானே இருக்கிறான்.

தன் உருவத்திலேயேஇன்னொருவன் இருப்பதைப் பார்த்தால் ரகுபதிக்கு அதிர்ச்சி ஏற்படாதா?

'மகேசபுரி இளவரசே! இது என்ன கடலுக்கு அடியில் அதிசயமாளிகை இங்கேயா உங்கள் அம்மா குரங்காக இருக்கிறார்கள்!' என்று விதர்ப்பராணி கேட்டாள்.

வீரகேது அதைக் காதில் வாங்காதவனாக இங்கு மங்கும் பரபரப்பாகத் தேடினான். யாரை? அவன் மனைவியைத் தான்.

சுரங்கவழியில் நிற்கும் உண்மையான ரகுபதிக்கு—அடி மேல் அடிவிழுந்தமாதிரி.

'என்ன இது! மகசேபுரி இளவரசனாகிய நாம் இங்கே இருக்கிறோம். ஆனால் என்னைப்போல் தோற்றம் உள்ளவன் என்பதற்காக அவனைப் போய் மகேசபுரி இளவரசே என்று அந்தப் பெண் அழைக்கிறாளே, அந்தப் பெண் யார்? என்னை போலவே உருவமுள்ள அவன் யார்?

'இளவரசே! என்ன? கேட்கிறேன் பேசாமல் எதையோ தேடுகிறீர்களே...' என்று சிணுங்கினாள் ராணி.

உணர்ச்சி வசமான வீரகேது அறிவை இழந்தவனாக— 'நான், தேடுகிறேன் என் மனைவியை' என்று தன்னை மறந்து உளறி விட்டான்.

'விதாப்ப மகாராணி திகைத்தாள்.

'என்ன உங்கள் மனைவியா?' என்று பதறினாள்.

'இல்லை...இல்லை என்று சமாளித்தான் வீரகேது.

விதர்ப்ப ராணிக்கு சந்தேகம் பிறந்தது.

'நீங்கள் மகசேபுரி நாட்டு இளவரசர் ரகுபதியா இல்லையா?' என்று கடுமையாகக் கேட்டாள்...ராணி.

'நான்!' என்று பயங்கரமாகச் சிரித்தபடியே ராணி மீது குபீர் என்று பாய்ந்தான், பட்டுத்துணியில் போர்த்தி யிருக்கிற இரண்டு மந்திரக்கோல்களையும் பறித்துக் கொண் டான் வீரகேது, விதர்ப்பராணி வெலவெலத்துப் போனள்

'நானு? மகாராணியாகிய உன்னை மயக்கிய மாயாவி நான். ரகுபதியல்ல, ரகுபதி உருவில் வந்தவன் நான் இளைஞன் இளவரசன் அல்ல, திருமணமானவன். என் மனைவி மோனு. அவளுக்காகவே இத்தனை படாதபாடுகள் பட்டேன்'.

'ஐயோ மோசம் போனேன் என்னை ஏமாற்றிவிட்டாயே'

'அழாதே! ஐந்து தேசங்களுக்கு மட்டுமே மகாராஜா வாக ஆகப் போகிறேம் என்று எண்ணியிருந்தேன். உன்னை யும் மணந்து கொள்கிறேன் என்று வார்த்தைகளை கொட்டி ஞன்,

பிறகு பட்டுத்துணியைப் பிரித்து நன்மை பயக்கும் மந்திரகோலை எடுத்தான் வீரகேது. தனக்கு நேராகபிடித்து 'என் சுயரூபம் வருவதாக என்றன். பழைய வீரகேது உருவ மானன். மாடசாமிசிலை பக்கம் திரும்பினுன். கண்களை மூடி மந்திரங்களை முணுமுணுத்துவிட்டு 'முக்கண் மாயாவி' ஆவி உருவில் அலையும் என் குருவே! ஆவியே! என் மனைவி எங்கே? எங்கே?' என்று ஓங்காரமாய் கூச்சலிட்டான். முன் போல ஆவி பேசவில்லை என்றவுடனே ஆத்திரத்தோடு மாட சாமியின் சிலையை மேலும் கீழும் பார்த்தான்.

சிலையின் காலடியில் ஒரு ஓலை கிடந்தது. அது மோனு வைக் கைது செய்து கூட்டிச் சென்றபோது இளவரசன் ரகுபதி எழுதப்பட்ட ஓலை.

அதைப் படித்தான்.

டேய் மாயாவி வீரகேது! உன் மனைவி மோனுவை சிறை எடுத்துச் சென்றிருக்கிறேன். மகேசபுரி சிறையில் இருப் பாள். உன் மனைவி தேவையானுல்வா. என் தாயாரை பழைய உருவமாக மாற்று. அதன்பிறகுதான்...'

# வீரகேது வந்தான்

'ஆ!' என்று கூச்சல் போட்டான்.

கூர்க்கவே படித்ததால் நடந்துள்ள விஷயத்தை ஓரளவு புரிந்து கொண்டாள் விதர்ப்பராணி.

'ஏய் மகாராணி! நான் என் மனைவியை மீட்கப் போகிறேன். ரகுபதியிடம் பணிந்து போகமாட்டேன். உன்வசமிருந்த இரண்டு மந்திரச்சொல்கள் இப்போது என்வசமே. பழைய எலும்பு மந்திரச்சொல்கூட என்னிடமே இருக்கிறது. இனி எவரும் என்னை அசைக்க முடியாது. என்று கடகட எனச் சிரித்தான்.

புறப்பட எத்தனித்தான்.

ராணியும் அவனைப்பின் தொடர ஆரம்பித்தாள்.

'ஏய், நீ ஏன் என்னோடு வருகிறாய்? நீ இங்கேயேகிட. இளவரசன் ரகுபதியை ஒழித்துக் கட்டிவிட்டு வருகிறேன்.'

'விதர்ப்ப ராணி மிரளமிரள விழித்தாள்.

'ஆசைக்கு இடம் கொடுத்து அவசரப்பட்டு இங்கே வந்து ஒரு அக்கிரமக்காரனிடம் அகப்பட்டுக் கொண்டோமே' என்று வருந்தினாள்.

சற்றுநேரம் சென்றது—

பாறைக் கதவின் பின்புறமிருந்து ஒரு உருவம்...

என்ன ஆச்சரியம்!

இளவரசன் ரகுபதி வெளியே வந்தான்.

'விதர்ப்ப ராணி அவர்களே! வணக்கம்'

குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினுள் ராணி.

ரகுபதி நிற்பதைக் கண்டு மேலும் திகைப்பினுல் தடு மாற்றம் அடைந்தாள்.

இன்னுமா என்னை சோதிக்கிருய் மீண்டும் இளவரசன் உருவில் வந்து ஏமாற்றப் பார்க்கிருயா?'

இளவரசன் ரகுபதி சிரித்தான்.

'இனிமேல் என்னிடம் பேச என்ன இருக்கிறது'

'நிறைய இருக்கிறது?'

பொய் உன் மனைவியை மீட்டு வருகிறேன் என்று சொல்லி விட்டுப் போனுயே அப்படியே போயேன் மீண்டும் ஏன் இங்கே வந்திருக்கிருய்,

மகாராணி நான் மாயாவி வீரகேது இல்லை உண்மையி லேயே மகேசபுரி நாட்டு இளவரசன் ரகுபதி'

ஆஹா...ஹா... இன்னுமா உன்னை நம்புவேன். உன் மாயஜால வேலைகளைப் பார்த்து இனி ஒரு போதும் ஏமாற மாட்டேன்

'ஐயோ! ஐயோ! சத்தியமாக நான் ரகுபதியே'

இதைக் கேட்டு மகாராணி ஏளனமாகச் சிரித்தாள்!

இந்த கடல் மாளிகையை எப்படி அழிப்பது என்று ஆராய வந்தேன். ஏன தாயாரை இந்த வீரகேது கடத்தி வந்த போது ஒரு சுருக்குப் பையைத் தவற விட்டு வந்தான். இதோ அது'

அவன் காட்டிய பையைக் கவனித்தாள் ராணி!

இதிலுள்ள விளக்குகள்தான் கடல்வழியை உண்டாக்கும் சக்தியை உண்டயவை இதன் உதவியால்தான் இங்கே வந்தேன். இதோ இந்தப் பாறை வழியைக் கொஞ்ச நேரத்திற்கு முன்னால்தான் கண்டு பிடித்தேன். வாருங்கள் இதன் வழியே நாம் தப்பிப் போய் விடுவோம்'

'இதை நான் எப்படி நம்புவேன்?'

உங்களுக்கு எதன் மீது நம்பிக்கை உண்டோ அதன் மீது ஆணையிடுகிறேன். குரங்காக வாழும் என் தாயார் மீது சத்தியம் இப்போது நான் சொன்னதெல்லாம் உண்மை என்னை நம்புங்கள் நாம் உடனே தப்பியோட வேண்டும். அரண்மனைக்குப் போய் வீரகேசரியின் சதியை முறியடிக்க வேண்டும்' என்று உருக்கமாகப் பேசினான் ரகுபதி,

அதன் பிறகு கூட பாதி நம்பிக்கையும் பாதி சந்தேகமுமாக அவனைப்பின் தொடர்ந்தாள் மகாராணி.

இருவரும் சுரங்கப் பாதை வழியாக நடந்தார்கள் அப்பாதை கடலுக்கு அப்பால் கொண்டு போய் விடக் கூடிய சுரங்கப்பாதையே என்ற ரகுபதியின் கணிப்பு பொய் யாகவில்லை.

சுரங்க வழியே நடந்தார்கள் வெகு தூரம் வந்த பிறகு பாதை முடிந்தது,

இருவரும் வெளியே வந்து நின்று சுற்றும் முற்றும் பார் தார்கள் என்ன ஆச்சரியம் அது அரண்மனையை சார்ந்த பூங்காவனம் கடல் மாளிகையில் சுரங்கவழி இங்கே முடிகிறது என்றால்...சரிதான்...அரண்மனைக்கும் கடல் மாளிகைக்கும் போக்குவரத்தாக இந்த சுரங்கப்பாதை அமைக்கப் பட்டிருக்கிறது ரகுபதியின் முன்னோர்கள்தான் இதைக்கட்டியிருக்க வேண்டும் இது அடுத்து வந்த ராஜ வம்சத்தினர்களும் தெரியாமல் தூர்ந்து போயிருக்கிறது.

க்ஷண நேரத்தில்—இப்படித்தான் இருக்கும் என்ற தீர்மானத்திற்கு வந்தான் ரகுபதி.

மறுகணம் மகாராணியைக் கூட்டிக் கொண்டு பின்புற வழியாக அரண்மனைக்குள் நுழைந்தான்.

அரண்மனை சபாமண்டபம், அமைச்சர்களும் தளபதிகளும் சபா மண்டபத்தில் வரிசை தவறு உட்காராமல் நின்றார்கள். மாயாவி வீரகேது சம்பிரமாக சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தான்.

'அமைச்சரே! உயிர் மீது ஆசையிருந்தால் ஒழுங்குமரியாதையாக இரும்புக் கோட்டை இருக்கும் இடத்தைக் காட்டிவிடும் ன் மனைவியைக் காணவேண்டும் என் மனைவியை சிறையிலடைத்த குற்றத்திற்கு நீங்கள் பொறுப்பாளி அல்ல அவளை நான் கவனித்துக் கொள்கிறேன். உங்களை விடுதலைசெய்து விடுவேன் மகாராணி குரங்காகவே இருக்கட்டும் இனி இந்த ராஜ்ஜியம் எனக்கே சொந்தம்...'

'மாயாவியே! உன் மிரட்டலுக்குப் பயப்படமாட்டோம் உயிரே போனாலும் சரி...பணியோம் எங்களை என்ன செய்ய வேண்டுமோ செய்து கொள்' என்றார் அமைச்சர்.

'ஆகா—கா...என்ன திமிர் உங்களுக்கு, இதோ உங்களை' என்று திசைக்குப் பயன்படும் மந்திரக்கோலை எடுத்தான் வீரகேது.

அதே சமயம்...மேல் மாடத்திலிருந்து குபீர் என்று பாய்ந்தான் ரகுபதி. சரியாக வீரகே து மேலே விழுந்தான். வீரகேது தடுமாறி விழ்ந்தான். சிம்மாசனத்திலிருந்து கட கடவென உருண்டான்.

இரு கைகளில் வைத்திருந்த இரண்டு மந்திரக்கோல்களும் கைதவறி திசைக்கொரு பக்கம் விழுந்தன. மேல் மாடத்திலிருந்து நீவிலிருந்து நீச்சல் குளத்தில் தலைகுப்புறக் குதிக்கிற மாதிரி ஆண்மகன் போல விதர்ப்ப மகாராணி பாய்ந்தாள். சிறிதும் அடிபடாமல்...தரையில் விழ்ந்து எழுந்தாள். இரண்டு மந்திரக்கோல்களையும் ஓடிப்போய் எடுத்து விட்டாள். இதெல்லாம் கண் இமைக்கும் நொடிப் பொழுதில் நடந்து விட்டன.

# கடும் சண்டை!

மாயாவி வீரகேதுவுடன் கட்டிப்புரண்டு சண்டையிட்டான் ரகுபதி மாயாவியை அடித்து நொறுக்க முன்னே வந்த தளபதியை—அமைச்சரை ஏனையோரைத் தடுத்து விட்டான் ரகுபதி.

வீரகேது செம்மையாக அடி உதை வாங்கிச் சுருண்டு விழுந்தான். உடனே தளபதியும் வீரர்களும் வீரகேதுவை கட்டிப் பிடித்தவாறு நின்றார்கள்.

ஏண்டா வீரகேது உனக்குச் சிம்மாசனமா கேட்கிறது சிம்மாசனம் இப்போ எங்கேடா உன் அகங்காரம். ஆணவச் சிரிப்பு விதர்ப்பநாடு போய் என் உருவம் எடுத்து மகாராணியை மயக்கிய மாயாவியே இதோ அந்த மகாராணியைக் காப்பாற்றி கூட்டி வந்திருக்கிறேன். இப்போது மகாராணியை உன்னால் என்ன செய்யமுடியும். மயக்கித் தான் பாரேன் உன்னைப் பழிவாங்கும் பாக்கியம் எனக்கா மகாராணிக்கா என்பது எங்களுக்குள்ளே போட்டி என்று நெஞ்சை உயர்த்தி நின்றான் ரகுபதி.

'நான்தான் அவனைப் பழிதீர்ப்பேன்' என்று முன்னேவந்தாள் மகாராணி!

'வேண்டாம். இவன் உங்களை மயக்கியவன். ஏமாற்றியவன் அவ்வளதான் ஆனால் எனக்கோ பெருந்தீங்கு செய்தவன் என் தந்தையைக் கொன்றவன். தாயை குரங்காக ஆக்கி கேவலப்படுத்தியவன் அசுரனைப் பழிதீர்க்கும் பொறுப்பு எனக்கே அதிகம்' என்று மேலும் முன்னேறினான் வீரகேது. 'இல்லை எனக்குத்தான் உரிமை' என்று சொல்ல முடியாமல்...ஓடிவந்தது குரங்கு. கையில் கத்தியோடு

தன்னைக் குரங்காக்கியவன் என்ற கொதிப்பு குரங்கு உருவில் இருக்கும் மகாராணி

கத்தியை ஓங்கியது, குத்து விழுந்திருக்கும். அதற்குள் 'அம்மா! வேண்டாம். ஒரு சிற்றெறும்புக்கூட தீங்கு செய் யாத தாங்கள் ஒரு கொலையைச் செய்ய வேண்டாம். நாம் மூவரில் யாருமே இவனைக் கொல்ல வேண்டாம். நாளைக்கு சபையைக் கூட்டி சட்டப்படி தூக்கிலிடுவோம்' என்று அறி வித்தான்.

உடனே தளபதி அவனை வீரர்கள் வசம் ஒப்படைத் தார். வீரர்கள் இழுத்துச் சென்றார்கள்.

நன்மைபயக்கும் மந்திரக்கோலை மகாராணியிடமிருந்து வாங்குவதற்காகக் கையை நீட்டினான் ரகுபதி.

அவளோ—'உஹூம் தரமாட்டேன்' என்று பின்வாங்கி னாள் ரகுபதி திகைத்துப் போனான். மற்றவர்களும் கோபம் அடைந்தார்கள்.

'விதர்ப்ப மகாராணி அவர்களே மாயாவி உங்களைக் கடல் மாளிகையில் சிறை வைத்து விட்டு வந்தான் சுரங்க வழியே உங்களைக்காப்பாற்றிக் கூட்டி வந்தவன் நான்...'

'அதற்காக'

'நன்றி காட்டும்படி கேட்கவில்லை. ஆனால்...என் தாய் உங்களைப் போல் ஒரு பெண் என்னைப் பெற்றெடுத்த தெய் வத்தை குரங்காக பார்த்து பார்த்து உள்ளத்தினுள்ளே அழுது கொண்டேயிருந்தேன். இப்போது பழைய உருவத்தை வழங்கக் கூடிய வல்லமை மிக்க மந்திரக்கோல் உங்கள் வசம் இருந்தும்...

'இருக்கட்டுமே அதை உங்கள் கையில் ஏன் கொடுக்க வேண்டும் இவை இரண்டும் எனக்குச் சொந்தமல்லவா மூக்கன் மாயாவி என் வாழ்வில் விளையாடிய போது அவனை அழிக்கபட்டிவிக்கிரமாதித்தன் எனக்கு வழங்கிய தன்றோ,

'ஆமாம் அவை எனக்கு சொந்தமாக வேண்டாம். என் தாயை உருமாற்றி ஒப்படைத்து விடுங்கள் போதும்'

மேலும் சிரிக்கச் சிரிக்க...

.இளவரசே! உங்களுக்குள்ள அக்கறை எனக்கு இருக்காதா! என் அத்தைக் நான் செய்யும் முதல் தொண்டு இதுவாக இருக்கட்டுமே...என் கையால் நடக்கட்டுமே...' என்று கூறி நன்மை தரும் மந்திரக்கோலை எடுத்து...'மகாராணி கங்காதேவியாக ஆகக் கடவது' என்றாள் விதர்ப்பராணி.

குரங்கு...உருமாற்ற மடைந்தது'

அனைவரும் அகலக் கண் விரித்து அதிசயத்தைப் பார்த்தா

மகாராணி! கங்காதேவியாக உரு பெற்றுக் காட்சியளித்தாள் அனைவரும் வணங்கினார்கள்.

ரகுபதி ஒரு தாவாகத் தாவி அன்னையை அணைத்துக் கொண்டு குழந்தையைப் போல் விம்மினான். ஆனந்தக் கண்ணீர் தாய் மகன் இருவர் கண்களிலும் மகன் ரகுபதியை ஆறுதலாகத் தட்டிக் கொடுத்தார்.

மகாராணி கங்காதேவி விதர்ப்ப மகாராணி பக்கம் திரும்பி...'இளவரசி! நீ மகாபுத்திசாலி வெகுசாமர்த்தியமாக உன் அந்தரங்க ஆசையைக்காட்டி விட்டாய். என்னை அத்தை என்று குறிப்பிட்டாயே அதைத்தான் சொல்லுகிறேன் ஆம் நான் உனக்கு அத்தைதான் நீ எனக்கு மருமகள் தான் வா...மருமகளே வா! நீ எனக்கு மறுவாழ்வு தந்தமருமகள்' என்று வாரி அணைத்தாள்.

வெட்கத்தால் விதர்ப்ப ராணியின் உடல் பூராவும் சிவந்தது.

'இளவரசியாரே' என்று அழைத்தான் ரகுபதி.

விதர்ப்பராணி திரும்பினாள்.

கடந்த ஒரிரு ஆண்டுகளுக்கு முன்னால் முக்கண் மாயாவியை அழித்தீர்கள். இப்போது உங்களை மயக்கிய மாயாவியை அழிக்கவும் நீங்களே காரணமாக இருந்தீர்கள். அதற்காக என் நாடு நன்றிக்கடன் பட்டிருக்கிறது. நானும் பாராட்கிறேன் என் ரகுபதி குறிப்பிடும்போது...

'மகாராஜா! மகாராஜா! என்று ஐந்தாறு வீரர்கள் ஓடி வந்தார்கள், அனைவரும் திரும்பினார்கள் அச்சத்தோடு.

'மாயாவியை கைது செய்து இழுத்து சென்று சிறையில் அடைக்கப்படும் போது காவல் வீரர்கள் அனைவரையும் மயங்கி விழச் செய்து விட்டு மனைவியோடு தப்பியோடி விட்டான் அவனிடமிருந்து தப்பியவர்கள் நாங்கள்தான். என்று பதை பதைக்கக் கூறினார்கள்.

உடனே...ஐயய்யோ அந்த எலும்பு மந்திரக்கோலை அபகரிக்காமல் விட்டு விட்டோமே அதுதான் காரணம் என்று கத்தினாள் விதர்ப்பராணி.

மறுகணம் பாய்ந்தோடினான் ரகுபதி,

ஒரே தாலாகத் தாவி அரண்மனை முன்னே நின்ற குதிரைகளில் ஒன்றின் மீது ஏறினான் பறந்தான்.

விதர்ப்ப மகாராணி பெரிய மகாராணியையும் அமைச்சர் தளபதி முதலியோரையும் சுரங்க வழியாக அழைத்துச் சென்றாள். மந்திரவாதி கடல் மாளிகைக்குள் வந்தால் அங்கே அவனை மடக்கி விடலாம் என்ற எண்ணத்தில்.

ரகுபதி கனவேகமாய் கடற்கரைக்கு குதிரையை விரட்டு விரட்டு என்று விரட்டினான்,

குதிரையோ அவனை விட அதிகமாக துடிப்பாக ஓடி யது கடற்கரையை அடைந்தது.

மாயாவியும் மோனாவும் படகில் போய்க் கொண்டிருப் பதைக் கண்டான். மற்றொரு படகில் ஏறிவிரைந்தான் ரகுபதி.

வீரகேது துடுப்பை அசைத்து அசைத்து வேகத்தை அதிகரித்தான். ரகுபதியும் சளைக்கவில்லை.

இதோ நெருங்கி விட்டான்.

தனது படகை வீரகேதுவின் படகில் மோதவிட விரைந்தான்.

வீரகேது சுருக்குப் பையை எடுத்தான். வில்லையை எடுக்கப் போனான். அதில் ஒரு வில்லை—கூட இல்லை தீர்ந்து போய்விட்டதைக் கூட முன்னதாகத் தெரிந்து கொள்ளாத தவறிய முட்டாள். மற்றொரு பையில் நிறைய இருந்தன. அதைத்தான் அரண்மனையில் தவறவிட்டானே. அந்தப் பை இப்போ ரகுபதி கையிலே.

'டேய் வீரகேது வில்லைத்தீர்ந்து விட்டதா, உன் கதையும் தீர்ந்துவிட்டது மற்றொருபை இதோ என்னிடம்... இனி நீ கடல் மாளிகைக்குள் போய் பதுங்க முடியாது' என்று எக்களாமிட்டுச் சிரித்தான் ரகுபதி.

உடனே எலும்பு மந்திரக்கோலை எடுத்து நீட்டினான் வீரகேது. அடுத்த நொடியே தன் வசமிருந்த தேதியை குறி வைத்து வீசினான் ரகுபதி. எலும்பு மந்திரக்கோல் படகுக்குள் விழுந்தது.

மறுகணம்—வீரகேதுவின் படக்குக்குதி தாவினான்—தாக்கினான் வீரகேதுவை!

உக்கிரமானசண்டை!

உயிர்பிழைக்க கடைசியாகப் போராடுகிறவன் பயங்கரமாகத்தான் மோதுவான்.

படகு கவிழ்ந்துவிடும் போல ஆட்டம் கண்டது இடை இடையே எலும்பு மந்திரக்கோலை எடுக்க மோனு முயன்றான். அதையும் தடுத்தபடி வீரகேதுவையும் தாக்கினான் ரகுபதி

ரகுபதியை வெல்ல யாரால் ஆகும்.

வீரகேது சாய்ந்தான். இருவரையும் ஒன்றாகப் பிணைத்

துக் கட்டினான். ஒரு வில்லை எடுத்து கடலில் போட்டான் ரகுபதி,

கடலில் சுழி விழுந்து வழிவிட்டது.

அவர்களைக் கட்டி இழுத்தவாறு குதித்தான்.

வீரகேதுவையும்—மோனாவையும் மாடசாமிலை முன்னால் நிறுத்தினான்,

# வீரகேது அழிந்தான்

'வீரகேது! சட்டப்படி விசாரித்துத் தூக்கிலிட நினைத்தேன் நீயோ தப்பியோடுகிறாய் இனிவிடப் போவதில்லை. உன் குல தெய்லமான மாடசாமி சிலைக்கு முன்னிலையிலேயே உன்னையும் உன் மனைவியையும் நரபலியிடப் போகிறேன்' என்று மாடசாமிசிலை கையிலிருந்த வாளை எடுத்தான்.

அதே சமயம் விதர்ப்பராணி மற்றவர்களோடு சுரங்கப் பாதை வழியே வந்து சேர்ந்தாள்,

'இளவரசே சற்று பொறுங்கள்' என்று ஓடி வந்து குறுக்கே நின்றாள்.

'விதர்ப்பராணி! மேலும் இவர்களை விட்டு வைக்கக் கூடாது'

'என் முடிவும் அதுதான்...'

அப்போது அமைச்சர் குறுக்கிட்டு இவர்கள் இறுதியாக

என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்டு விட்டு தண்டனையை நிறைவேற்றலாம் என்று கூறினார்.

ஆகட்டும் அமைச்சரே' என்று சம்மதித்தான் ரகுபதி.

'என் இறுதி வேண்டுகோள்! இனி என்னைவிட மகட்மர் கள் ஆகவே ஒரு உண்மையைச் சொல்லி விடுகிறேன். என் ஆயுள் முடிய இன்னும் பன்னிரண்டு ஆண்டுகள் இருப்ப தாக முக்கனி மாயாவியின் மூலம் அறிவேன். அந்த ஆவி என் மனைவி மோனா மீது குடியிருக்கிறது. பன்னிரண்டு ஆண்டுகள் நானும் ஆவியாகத்தான் அலைவேன் அப்புறம் தான் ஆயுள் முடிந்து நரகம் போவேன் அந்தப் பன்னிரண்டு ஆண்டுகளும் நான் ஆவியாக அலைந்து அக்கிரமம் செய்யா மல் நன்மைகள் செய்து ஆயுளை முடிக்க ஆசைப்படுகிறேன். நன்மைதரும் அந்தமந்திரக்கோலால் பன்னிரண்டு ஆண்டு களுக்கு நான் ஒரு நல்லதே செய்யும் வேதாளமாக நடமாட சபித்து விடுங்கள். என்னைக் கொன்றவுடனேயே நல்ல மந்திரக்கோலை என் உடலின் முன்னால் காட்டி ஆணையிடுங் கள், என் மனைவி மீது முக்கன் மாயாவி இருப்பதால் அதை அடக்கி விடுங்கள். அப்புறம் அவளுக்குத்தண்டனை விதியுங் கள் என் கூறி அழுதான் வீரகேது.

'மோனாவிடம் குடியிருக்கும் ஆவியை அடக்குவது எப்படி?' என்று ரகுபதி குழம்பினான்.

'ஆவியானாலும் பேயானாலும் உச்சந்தலையில் ஆணியை அடித்து அடக்கிவிடுவார்கள் மகனே' என்று வழிகாட்டினாள் பெரிய மகாராணி.

நீண்ட வாளில் பொருத்தியிருந்த ஒரு ஆணியைக்கழற்றி கொடுத்தார் தளபதி அதை வாளின் மோனாவின் தலையில் நிறுத்தி அடித்து அழுத்து உள்ளே இறக்கினான் விதர்ப்ப நாட்டு ராணி அவளின் ரத்தம் ரத்தமாக வாந்தி எடுத்து உயிரை விட்டாள்—

தன் கண் முன்னால் மனைவி மோகன உயிர் விடுவதைப் பார்த்து கதறி அழுதான்.

'ம்...என்னையும் கொன்று விடுங்கள் என்றான் ஐந்து மகாராஜாவுக்களும் கொலையுண்டார்...ரகுபதியின் அப்பா உட்பட இந்த ஐந்து நாட்டு இளவரசர்களில் யார் என் உதவியை நாடினாலும் அவர்களுக்காக நாயாக உழைப்பேன் வேதாளமாக நான் திரியும் போது' என்று கடைசியாகப் பேசி முடிந்தான்—வீரகேது.

தண்டனை நிறை வேற்றும் பொறுப்பை தளபதி ஏற்றார் இரண்டு மகாராணிகளும் அந்தக் கண்ணுருவியைக் கண்ணால் பார்க்க...மனமின்றி மறுபுறம் திரும்பி நின்றார்கள்

தளபதி வாளை ஓங்கி வீரகேதுவின் நெஞ்சில் குத்தினார் அதேசமயம் நல்ல மந்திரக்கோலை வீரகேது உடலுக்கு நேராக காட்டி உன் ஆயுள் முடியும் வரை வேதாளமாக வாழ்ந்து நல்லதே செய்வாயாக' என்றான் ரகுபதி.

வீரகேதுவின் துடியாய்த் துடித்து உடல் அடங்கியது. ஆவி பிரிந்தது. இந்நேரம் அது வேதாளமாக மாறியிருக்க கூடும்.

பின்னர் என்ன? அந்த நன்மை பயக்கும் மந்திரக் கோலால் நாய், கரடி, நரி, ஓநாயாக உருமாற்றப்பட்டிருந்த மற்ற நான்கு தேசத்து மகாராணிகளுக்கும்சுவுருபம் கிடைக்கச் செய்தார்கள். அந்தந்த நாட்டு இளவரசர்கள் தங்கள் தாய்மார்கள் கிடைத்து விட்ட மகிழ்ச்சியால் ரகுபதியையும் விதர்ப்பராணியையும் பாராட்டினார்கள்.

விதர்ப்பராணி ரகுபதியின் மனைவியானாள்!

விதர்ப்பநாடும்—மகேசபுரியும் நாடாக மாறியது.

இந்த மகாராணியை மயக்கிய மாயாவி இறுதியில் மரணதண்டனை பெற்றபிறகும் ஆயுள் முடிந்தது.

முற்றும்